Dr. லில்லியன் ஸ்டான்லி



# அவள் தீர்மானங்கள்

# அவள்
# தீர்மானங்கள்

**Dr. லில்லியன் ஸ்டான்லி,** MBBS, DCH
*மிஷனரி*
*ஆசீர்வாத இளைஞர் இயக்கம்*

*வெளியிடுவோர் :*
**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
அஞ்சல் பை 609, வேலூர் 632 006
தொலைபேசி : 0416-2242943, 2248943
<bym@sancharnet.in>
www.BlessingYouthMission

**HER DECISIONS** (TAMIL)

Copyright 1984 Dr. Lilian Stanley

First Edition : October 1984
Second Edition : January 1988
Third Edition : October 1991
Fourth Edition : December 1996
Fifth Edition : April 2001
Sixth Edition : August 2004
This Edition : February 2006

Write for price list.
These books are available in several Indian vernaculars also.

Printed at
Bapuji Printers, Chennai 600 002.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | மனைவியின் தீர்மானங்கள் | ... | 7 |
| 2. | மாமியாரின் தீர்மானங்கள் | ... | 10 |
| 3. | மருமகளின் தீர்மானங்கள் | ... | 13 |
| 4. | தாயின் தீர்மானங்கள் | ... | 16 |
| 5. | சகோதரியின் தீர்மானங்கள் | ... | 19 |
| 6. | மாணவியின் தீர்மானங்கள் | ... | 22 |
| 7. | எஜமாட்டியின் தீர்மானங்கள் | ... | 25 |
| 8. | பணிபுரியும் பெண்ணின் தீர்மானங்கள் | ... | 28 |
| 9. | சபை அங்கத்தினளின் தீர்மானங்கள் | ... | 31 |
| 10. | மங்கையின் தீர்மானங்கள் | ... | 34 |
| 11. | பாட்டியம்மாவின் தீர்மானங்கள் | ... | 37 |

# முன்னுரை

பிறரோடு நமது உறவைச் செப்பனிடுவதையே இத்தீர்மானங்களின் வரிசை முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது. வாசித்துவிட்டுப் புத்தகத்தை விசிறிவிடாமல், அவசரத்திற்கு எட்டும் இடத்தில் வைத்துக்கொள்ளுங்கள். கணவனோடோ, பிள்ளைகளோடோ, மாமியாரோடோ, அயலகத்தாரோடோ, மற்ற எவரோடோ மோதல் ஏற்பட்டு உள்ளம் அலைமோதும்போது இதன் பக்கங்களைப் புரட்டுங்கள். கண்களை மூடி ஒரு வினாடி "ஆண்டவரே, என்னை மாற்றும்" என்று ஜெபியுங்கள். தோல்வி கண்டால் துவண்டுவிடாதீர்கள். தொடர்ந்து முன்னேறுங்கள்! அருவருப்பான புழு உருவிலிருந்து அழகான **வண்ணத்துப்பூச்சியாய்** மாறிக்கொண்டிருக்கிறீர்கள். பாதை கடினம் தான். ஆனால் பரிசோ பெரிது. இப்புத்தகத்தை முன்னேற்றக்கூடிய கூடுதல் குறிப்புகளை எங்களுக்கு எழுதுங்கள். நல்லாசி!

உங்கள் சிநேகிதி

*7 ஆகஸ்டு 1984* ***லில்லியன் ஸ்டான்லி***

# 1

# மனைவியின் தீர்மானங்கள்

**1.** கேள்வி கேட்காமல், முகங்கோணாமல் என் கணவரின் சிறிய, பெரிய, எல்லாக் கட்டளைகளுக்கும் (பாவமானவைத் தவிர) கீழ்ப்படியத் தீர்மானிக்கிறேன். அதை முகமலர்ச்சியோடு செய்ய தேவ ஒத்தாசையை நாடுவேன். கணவரோடு காலையிலும் இரவிலும் ஜெபிக்கத் தீர்மானிக் கிறேன். நான் ஜெபிக்கும்போது என் கணவருக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவேன்.

**2.** கணவரை அன்பற்றுக் குற்றஞ்சாட்டுவதில்லை எனத் தீர்மானிக் கிறேன். அவர் செய்த தவற்றினால் கோபம் வரும்போது நாவை அடக்கிக் கொண்டு பின்பு பணிவோடு அதுகுறித்துப் பேசுவேன். இதுவரை அவரிடம் திருத்த முடியாமற்போன தவறுகளைக் குறித்து இனி நச்சரிக்காமல், சகித்துக்கொண்டு தேவன் அற்புதம் செய்ய அவர் கையில் விட்டு விடுவேன்.

**3.** கணவர் குறைகூறும்பொழுது அழவோ முகத்தைத் தொங்க விடவோமாட்டேன் எனத் தீர்மானிக்கிறேன். பதிலுக்கு கத்தமாட்டேன். நானே முதலாவது பெருமையை உதறிவிட்டு, காரியங்களைச் சரிசெய்ய முன் செல்வேன். அவரை மாற்றிவிட எதிர்பாராமல் என்னையே நல்லவிதமாய் மாற்றிக்கொள்ள முயற்சி எடுப்பேன். என் பெற்றோரிடம் குறைகூறச் செல்லமாட்டேன்.

**4.** கணவரோடு சிரித்துப் பேசி விளையாடத் தீர்மானிக்கிறேன். அவர்



வீட்டிற்குள் வரும்போது புன்முறுவல் பூப்பேன். அவர் விருப்பப்படி உடை உடுத்தி நடந்துகொள்வேன். வெட்கப்படாமல் அவர் விரும்புவதுபோல் அவரைக் கூப்பிடுவேன். எல்லாவற்றிலும் அவரை திருப்திசெய்ய முழுமுயற்சி எடுப்பேன். என்னுடைய உடல்மேல் எனக்கு அதிகாரமில்லை. அவருக்கே உண்டு என்பதை நினைவில் கொண்டு அவரது பாலுணர்வுத் தேவைகளை மனமகிழ்ச்சியோடு நிறைவேற்றுவேன். அவர் விருப்பத் திற்கேற்பச் சமைத்து, அவர் எதிர்பார்க்கும் காரியங்களை ஆமோதிப்பேன். தோல்விகளில் சலிக்கமாட்டேன். அவருக்கு என்னில் விருப்பமில்லாத வற்றை விட்டுவிடுவேன். தினமும் அவரைப் பாராட்ட சந்தர்ப்பம் நோக்கியிருப்பேன்.

**5.** உணவிற்கு இடைவேளையில் உண்ணும் கெட்டப் பழக்கத்தை விட்டுவிடத் தீர்மானிக்கிறேன். எப்பொழுதும் அசைபோட்டுக்கொண்டி ருக்க மாட்டேன். அளவுக்கு மீறி உண்டு உடல் பருக்கவோ, உடல் நலனைப் பேணாது வியாதிப்படவோமாட்டேன். வாரம் ஒருமுறையாவது கணவர், பிள்ளைகள், குடும்ப அங்கத்தினருக்காக உபவாசித்து ஜெபிக்கத் தீர்மானிக்கிறேன்.

**6.** கணவரிடம் மரியாதையோடு நடந்துகொள்ளத் தீர்மானிக்கிறேன். அவரை அவமதிக்கமாட்டேன். பிறர் முன்பாக அவரைக் குறைத்துப் பேச மாட்டேன். அவர் குறைகளை மற்றவர்களிடம் வெளிப்படுத்தமாட்டேன்.

**7.** எல்லா நாட்களிலும் வீட்டைச் சுத்தமாக வைக்கத் தீர்மானிக்கிறேன். தினமும் அரைமணி நேரம் சுற்றிவந்து, வீட்டை ஒழுங்குபடுத்துவதை வீணென்று கருதமாட்டேன். துணிகளை அப்படியே குவித்து வைக்க மாட்டேன். அடுக்குத் தட்டுகளைக் குழப்பமாட்டேன். வீட்டைக் கவர்ச்சிகரமாய் வைப்பேன். களைத்துப்போயிருந்தாலும் முகத்தைச் சுளிக்காமல் வருபவரை ஏற்று உபசரிப்பேன். சமயம் வாய்க்கும் போதெல்லாம் ஆண்டவரைக் குறித்துப் பேசுவேன்.

**8.** ஒரு சிறு தொகையாகிலும் மாதாமாதம் சேமித்து வைக்கத் தீர்மானிக்கிறேன். கடன்படாமல் காத்துக்கொள்வேன். கணவர் என்னிடம் ஒப்புவித்த பணத்தை வீணாக்கமாட்டேன். அளவுக்கு மீறி மிச்சம் பிடிக்கும் கருமியாக இராமல் முடிந்தவரை ஏழைகளுக்கு இரக்கம் பாராட்டுவேன்.

**9.** அண்மையிலுள்ள கிறிஸ்தவரல்லாத குடும்பத்தினரோடு நட்புக் கொள்ளத் தீர்மானிக்கிறேன். அவர்களைச் சந்திப்பேன். ஏதாவது பலகாரம் அனுப்புவேன். முடிந்தபொழுதெல்லாம் அவர்களின் இன்பங்களிலும் துக்கங்களிலும் பங்கெடுப்பேன். அவர்களது மூடப்பழக்கவழக்கங்களை எடுத்த எடுப்பில் கண்டனம் செய்து குற்றஞ்சாட்டாமல் அவர்களுக்காக

ஜெபித்து அன்போடு ஏற்ற வேளையில் சாட்சி பகர்வேன். தபால்காரர், பால்காரர், தெரு வியாபாரி, பிச்சைக்காரர், தொலைபேசி சரிசெய்வோர், செய்தித்தாள் போடும் பையன் இவர்களின் பெயரை விசாரித்து சுவிசேஷத்தினிமித்தமாய் இவர்களோடு பழகத் தீர்மானிக்கிறேன்.

**10.** மற்றொரு பெண் அல்லது பெண்களைச் சந்திக்கும்போது மூன்றாவது நபரைக் குறித்து தவறாகப் பேசாமல் எச்சரிக்கையாயிருக்கத் தீர்மானிக்கிறேன். ஒரு சகோதரியின் தீய காரியங்களைக் குறித்து விசாரித்து அறியும் ஆவலை அடக்கிக்கொள்வேன். மற்றப் பெண்களைப் பற்றி நன்மை யானவைகளைப் பேச முயற்சி எடுப்பேன். நாவடக்கமே பூரணம் என்பதைப் பயின்றுகொள்வேன்.

---

*எபே 5:22,23,33; 1 பேது 3:1-6; நீதி 5:18-20; நீதி 31*



# 2
# மாமியாரின் தீர்மானங்கள்

**1.** என் மகனும் அவன் மனைவியும் ஒரு தனிக்குடும்பம் எனக் கருதத் தீர்மானிக்கிறேன். அவர்கள் தீர்மானங்களில் தலையிடமாட்டேன். அவர்களை விடுதலையோடு சுதந்திரமாய் வாழவிடுவதோடல்லாமல், என் உதவி தேவைப்படும்பொழுது மகிழ்ச்சியுடன் ஆலோசனை கொடுக்க ஆயத்தமாயிருப்பேன்.

**2.** வெளிப்படையாய் மருமகளை மெச்சிக்கொள்ளத் தீர்மானிக்கிறேன். அவள் தவறிழைத்தாலும் ‘இப்பொழுதுதானே வாழ்க்கையைத் துவங்கி யிருக்கிறாள். இன்னும் எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறதே’ என்று எனக்கு அடிக்கடி நினைவூட்டிக்கொள்வேன். அவளைக் குற்றஞ் சாட்டாதபடி என் நாவை அடக்கிக்கொள்வேன். அவளது குறைகளைக் குற்றங் கண்டுபிடிக்காமல் பொறுத்துப்போகப் பழகுவேன்.

**3.** என் மகன், என் மகன் என்று அளவிற்கு மீறி சொந்தங்கொண்டா டுவதில்லையென்று தீர்மானிக்கிறேன். கடினமாயிருந்தாலும் மருமகளே அவனுக்கு காபி, உணவு பரிமாறவும், வீட்டிற்கு வரும்பொழுது கதவைத் திறந்து வரவேற்கவும் விடுவேன். அவனது வருமானத்திற்காகப் போட்டி யிடமாட்டேன். அவனது காரியங்களை மருமகள் கவனிப்பதை மகிழ்ச்சி யுடன் சகிப்பேன். அவர்கள் இருவரும் உரையாடும்போது நான் ஒதுக்கப் படுவதாகக் கவலைப்படமாட்டேன்.

**4.** மகனிடம் அவனுடைய மனைவியைக் குறித்துக் குறைகூறுவ தில்லை எனத் தீர்மானிக்கிறேன். அவன் வீட்டிற்கு வந்தவுடன் அவளது தவறுகளை வெளிப்படுத்தாமல் அவற்றை மூடி மறைத்து அவளைப் பாதுகாப்பேன். அவர்களுக்குள் சண்டையோ மனவருத்தமோ ஏற்பட வேண்டுமென்று இரகசியமாய்க்கூட விரும்பமாட்டேன். அவர்களுக்குள் ஒருமனப்பாடும் ஒற்றுமையும் ஓங்க உண்மையாய் விரும்பி, ஜெபித்து, என்னாலியன்றதைச் செய்வேன். மருமகளை ஆடவைக்க மகனைக் குத்திவிடமாட்டேன்.

**5.** மருமகளின் அவமரியாதையான வார்த்தைகளையும் வேண்டா வெறுப்பான நடத்தையையும் மன்னித்துவிடத் தீர்மானிக்கிறேன். தேவனே என் நியாயாதிபதி என்பதை நினைவிற்கொண்டு அவளது பொய்க் குற்றச்சாட்டுகளை அமைதியாய்ச் சகிப்பேன்.

**6.** மூன்றுவேளை உணவிற்காகவும், வீட்டிற்காகவும், சூழ்ந்திருக்கும் குடும்பத்திற்காகவும் தேவனுக்கு நன்றியுள்ளவளாயிருக்கத் தீர்மானிக் கிறேன். அப்படியே பிறரிடம் பேசுவேன். மருமகளுக்கு நன்றி கூறவோ, என் தவறு களுக்காக மன்னிப்புக் கேட்கவோ தயங்கமாட்டேன். அவளைக் குறித்துக் குறைவாகப் பிறரிடமோ, என் மகனிடமோ கூட பேசமாட்டேன். அதிருப்தியாய் முறுமுறுத்துக்கொண்டே இருக்கமாட்டேன்.

**7.** அவளுடைய பெற்றோர், பொருள், படிப்பு, தோற்றம் குறித்து பழித்துக் கூறுவதில்லையெனத் தீர்மானிக்கிறேன். அவளது வீட்டிலிருந்து நகையோ பணமோ வரவேண்டுமென்று நெருக்கமாட்டேன். அற்ப காரியத்திற்கும் அவளைப் பெற்றோரிடம் அனுப்பிவிடமாட்டேன். தாய் வீட்டிலிருந்து திரும்பும் பொழுது அவளை முகமலர்ச்சியோடு வரவேற்பேன். என் மகன் அவளை மணந்ததற்காக வருந்துகிறேனென்று ஒருபோதும் சொல்லாமல், அவள் எங்கள் குடும்பத்திற்கு வந்தபின் என் மகனிடம் காணப்படும் மாறுதல்களுக்காக மருமகளைப் பழிசாட்டாமல், அது தேவனே நியமித்தது என்பதைப் புரிந்து கொள்ள முயற்சிப்பேன்.

**8.** நல்ல பாட்டியம்மாவாயிருக்கத் தீர்மானிக்கிறேன். பேரப் பிள்ளை களுக்கு வேதக்கதைகளைப் போதித்து தேவைப்படும்பொழுது அவர் களைக் கவனித்துக்கொள்வேன். அவர்களது தாயைக் குறித்து நேர் முகமாகவோ மறைமுகமாகவோ அவர்களிடம் பழித்துப் பேசாமல் பெற்றோரைக் குறித்த அன்பும் மதிப்பும் அவர்களில் வளர ஊட்டுவேன்.



**9.** பொழுதுபோக்கிற்கு என் பிள்ளைகளையே சார்ந்திராமல் வீட்டைச் சுற்றி ஒரு நண்பர் வட்டாரம் உருவாக்குவேன். சாயங்காலங்களில் ஏழை கள், பிச்சைக்காரர், பிணியாளிகள், தள்ளப்பட்டோர், கிறிஸ்தவரல்லா தோரைச் சந்தித்து கிறிஸ்துவின் அன்பை அறிமுகப்படுத்துவேன். தேவன் எனக்குக் கொடுத்திருக்கிற ஓய்வு நேரத்திற்காக அவருக்கு நன்றி செலுத்தி அதை அவர் மகிமைக்காக நேர்த்தியாய்ச் செலவிடுவேன்.

**10.**புரிந்துகொள்ளுவதிலும், உதவுவதிலும், கொடுப்பதிலும், ஏற்றுக் கொள்வதிலும், ஜெபிப்பதிலும் என் மருமகளை என் மகளைப் போலவே நடத்தத் தீர்மானிக்கிறேன். என் மகள் ஒருநாள் மருமகளாக இருப்பாளே. என் மகள் தன் மாமியார் வீட்டில் எப்படி நடத்தப்படவேண்டுமென்று விரும்புவேனோ, அப்படியே என் மருமகளை நான் நடத்தவேண்டாமோ ?

---

*ஆதி 2:24; ரூத் 1:9; 4:16; மத் 7:12*

# 3
# மருமகளின் தீர்மானங்கள்

**1.** மாமியார் என்னிடம் நடந்துகொள்ளும்விதமோ, எழுதும் கடிதங் களோ எவ்விதம் இருந்தாலும் சரி நான் அன்போடு ஆனால் இயற்கையாக குறைந்தபட்சம் மாதமொரு கடிதமாவது எழுதத் தீர்மானிக்கிறேன். முடியும் போதெல்லாம் அவர்களைச் சந்தித்து அவர்களோடும் அவர்களின் மக்க ளோடும் நல்லுறவை உருவாக்குவேன்.

**2.** இத்தனை ஆண்டுகள் என் கணவரைப் பராமரித்ததற்கு என் அன்பையும் நன்றியையும் காட்டும்படியாக எங்கள் வருமானத்திலிருந்து அவர்களை ஆதரிக்க ஒரு தொகையை மாதந்தோறும் அனுப்பி வைக்கத் தீர்மானிக்கிறேன்.

**3.** மாமியாரைப் பார்த்துப் புன்முறுவல் பூக்கத் தீர்மானிக்கிறேன். அவர்கள் எனக்கு அவசியம் என்று உணர்த்தும்படியாக அவ்வப்பொழுது அவர்கள் உதவியை நாடுவேன். அதைக்குறித்து அவர்கள் ஜம்பமடித்துக் கொண்டாலும் எனக்கு ஒன்றும் தெரியாது என்று குத்திக்காட்டினாலும், அவர்களது வயதை எண்ணி அதைப் பொருட்படுத்தாமலிருக்க முயலுவேன். அவர்களது பத்தாம்பசலிக் கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் காணாததுபோல் விட்டுவிடுவேன்.

**4.** எதிர்பாராது அவர்கள் பிறந்தநாள் விருந்து கொண்டாடி அவர்களை மகிழ்விக்கத் தீர்மானிக்கிறேன். முறிந்த உறவை எப்படியாவது திரும்பச்



சரிசெய்துவிடுவதென்று உறுதிகொள்கிறேன். இதைச் சாதித்துவிட வழி முறைகளை யோசிப்பேன். உடனடி மாற்றத்தை அவர்களிடம் எதிர் பார்த்துச் சோர்ந்துபோகாமல் விடாமுயற்சியாய் நற்குணசாலியாய் நடந்து கொள்வேன்.

**5.** மாமியார் எனக்குப் புத்திமதி கூறும்போது முகத்தைத் திருப்பிக் கொள்ளவோ, அவர்கள் சொல்வதுதான் சரி என்று அறிந்தும், நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பிடிவாதமாகக் காரியங்களைச் செய்யவோ மாட்டேனெனத் தீர்மானிக்கிறேன். அவர்களிடமிருந்து விருப்பமாய்க் கற்றுக்கொள்வேன். அதை அவர்கள் தனக்குப் பெருமை யாய் எடுத்துக்கொண்டாலும் சகித்துக்கொள்வேன். என் பிள்ளைகள் அவர்களிடம் மரியாதையாய் நடந்துகொள்ளும்படிச் செய்வேன்.

**6.** அவர்களைக் குறித்து என் கணவரிடம் முறுமுறுப்பதில்லையென்று தீர்மானிக்கிறேன். எங்களிருவருக்கும் நடுவில் எழும்பும் சச்சரவுகளுக் காகப் பெற்றோரின் பரிதாபத்தை நாடாமல் அந்தரங்கத்தில் ஜெபிக்க மட்டுமே செய்வேன். உற்றார் அயலகத்தாரிடம் அவர்களைக் குறித்து புறங்கூறமாட்டேன். அவர்களுடைய நற்குணங்களைக் குறித்து மட்டுமே பேசுவதெனத் தீர்மானிக்கிறேன்.

**7.** அவர்களுடைய அவமதிப்புகள், குற்றச்சாட்டுகள், குறைகூறுதல் கள், கடிந்துகொள்ளுதல்கள் யாவற்றிற்கும் பொன்னான அமைதியைக் கையாளு வதென்று தீர்மானிக்கிறேன். அழவோ, பதிலுக்குக் கத்தவோ மாட்டேன். எதுவும் நடவாததுபோல அமைதியாகவும் இயற்கையாகவும் நடந்து கொள்வேன். யார் பக்கத்தில் குறையிருப்பினும் நானே முதலில் ஒப்புரவாகச் செல்வேன். பணிவோடு என்னுடைய அவசர வார்த்தை களுக்கும் செயல்களுக்கும் மன்னிப்புக்கோருவேன். அவர்கள் என்னைத் திருத்தும்போது என் தவற்றை ஒத்துக்கொள்வேன்.

**8.** தேவன் என் மாமியாரை ஆசீர்வதித்து பலருக்கு ஆசீர்வாத மாக்கும்படி அவர்களுக்காக நாள்தோறும் ஜெபிக்கத் தீர்மானிக்கிறேன். தனி ஜெபத்திலும் குடும்ப ஜெபத்திலும் அவர்களை எங்களுக்குக் கொடுத்ததற்காகக் கர்த்தரைத் துதிப்பேன். என் கணவரின் சாதனை களால் வரும் மகிழ்ச்சியில் அவர்கள் பங்குகொண்டாலும் அதற்குரிய புகழை அவர்களே கட்டிக்கொண்டாலும் அதற்காகப் பொறாமைப்பட மாட்டேன்.

**9.** இடையிடையே அவர்கள் விருப்பப்படி உணவு சமைக்கத் தீர்மானிக் கிறேன். வீட்டை நடத்துவதில் உதவிசெய்ய இடம் கொடுப்பேன். வீட்டில் தேவையான சுதந்திரம் அளிப்பேன். எல்லாவற்றிலிருந்தும் அவர்களை ஒதுக்கி வைக்கமாட்டேன். அவர்களுடைய எஜமாட்டிபோல் நடந்துகொள்ள மாட்டேன்.

**10.** நோய்ப் படுக்கையில் அவர்களைக் கவனிக்கத் தீர்மானிக்கிறேன். அவர்களது பலவீனத்திலும், குறைகளிலும், குற்றங்களிலும் என் தாயாராயிருந்தால் எப்படி நடத்துவேனோ அப்படியே நடத்த முயற்சிப்பேன். எனக்கும் அவர்களுக்கும் விருப்பமான காரியங்களைக் குறித்து அவர் களிடம் சரளமாய்ப் பேசுவேன். தேவையானபோது தனிமையைப் போக்கும் துணையாயிருப்பேன். அவர்களது முதிர்வயதில் அவர்களைப் பாதுகாத்துப் பராமரிப்பேன் என்று வாக்களித்து அவர்களது எதிர்காலம் பற்றிய கவலையைப் போக்குவேன். நான் மாமியாராகும்போது என் மருமகள் என்னை எப்படி நடத்த விரும்புவேனோ அப்படியே என் மாமியாரை நடத்தத் தீர்மானிக்கிறேன்.

---

*ரூத் 4:15; ஆதி 27:46; மத் 5:44; 1 தீமோ 5:16*



# 4
# தாயின்தீர்மானங்கள்

**1.** இன்றுமுதல் குடும்ப ஜெபம் நடத்தத் தீர்மானிக்கிறேன். எல்லாத் தடைகளையும் மேற்கொண்டு தினமும் ஜெபம் நடத்த என்னாலியன்றதைச் செய்வேன். தினமும் அரைமணி நேரம் குடும்பத்திற்காக மட்டும் ஜெபிக்கத் தீர்மானிக்கிறேன். ஒவ்வொரு பிள்ளைக்காகவும் கர்த்தரைத் துதிப்பேன். வாரயிறுதி நாட்களில் ஒவ்வொரு பிள்ளையோடும் தனித்தனியே ஜெபிப்பேன். அவர்கள் தினமும் வேதத்தை வாசிக்கவும், காலையும் இரவும் ஜெபிக்கவும் கட்டாயப்படுத்துவேன். வேதத்தைக் கற்பிப்பேன். அளவுக்கு மீறி மதத்தைத் திணித்து அவர்கள் வெறுப்படையாதபடியும் கவனமா யிருப்பேன். ஒழுங்காக ஆலயத்திற்கும் ஞாயிறு பள்ளிக்கும் அழைத்துச் செல்வேன்.

**2.** பிள்ளைகளுக்கு முன்மாதிரியாயிருக்கத் தீர்மானிக்கிறேன். நானே சாதிக்க முடியாததை அவர்களிடம் எதிர்பார்க்கமாட்டேன். என் குறையை அவர்கள் சுட்டிக்காட்டும்போது தாழ்மையோடு ஒத்துக்கொள்வேன். தவறிழைக்கும்போது அவர்களிடம் மன்னிப்புக்கேட்கத் தயங்கமாட்டேன்.

**3.** பிள்ளைகளின் குறைபாடுகள், கல்வி, ஞானம், என்னிடம் நடந்துகொள்ளும்முறை யாவற்றிற்கும் அப்பாற்பட்டு அவர்களிடம் அன்புகாட்டத் தீர்மானிக்கிறேன். மற்றப் பிள்ளைகளோடு ஒப்பிட்டுப் பேசியோ, கேலி செய்தோ, பிறர் முன் அவர்களைக் குற்றஞ்சாட்டி குறைகூறியோ எரிச்சல் மூட்டமாட்டேன். என் சொல்லாலும் செயலாலும் அவர்கள் எனக்கு

வேண்டுமென்பதை அவர்கள் உணரும்படிச் செய்வேன். ஒரு பிள்ளையை மற்றொரு பிள்ளையோடு ஒப்பிடமாட்டேன். பாரபட்சமின்றி எல்லாரையும் ஒன்றாகவே நடத்துவேன். அவர்களது உழைப்பு, முயற்சி, நன்னத்தையைப் பாராட்டி பெருமைப் படுத்துவேன்.

**4.** பிரம்பைக் கையாடத் தீர்மானிக்கிறேன். கீழ்ப்படியும்வரை கத்திக் கொண்டும், பயமுறுத்திக்கொண்டுமிராமல் ஏற்ற வேளையில் அடி கொடுப்பேன். முழுக் கீழ்ப்படிதல் எதிர்பார்ப்பேன். பாவம் செய்யும்போது தண்டித்து, தவறிழைக்கும்போது அன்போடு திருத்துவேன். இருதயத்தில் கசப்பை சுமந்துகொண்டே திரிந்து நாள் முழுவதும் அதை வெளிப் படுத்தமாட்டேன். தண்டித்த பின், பழைய அன்பின் உறவைக் காட்டுவேன். முரட்டுக் கோபத்திலல்லாமல் அன்பிலும், அம்பலத்திலல்லாமல் அந்தரங் கத்திலும், வார்த்தைக்கு வார்த்தை பதில் கொடுக்காமல் பொறுமை யாயும் கண்டிப்பேன்.

**5.** என் கணவர் அவர்களைத் தண்டிக்கும்போதோ திருத்தும்போதோ குறுக்கிட்டுத் தடை செய்யக்கூடாதெனத் தீர்மானிக்கிறேன். பின்பாக அவரது கண்டிப்பு தவறென்பதுபோல் பிள்ளையிடம் நடந்துகொள்ளாமல் பொறுமையோடு விளங்குவேன். என் கணவரோடு எனக்கு மனவேறுபாடு ஏதுமிருந்தால் அதைப் பிள்ளைகளிடம் வெளிப்படுத்தமாட்டேன்.

**6.** என் முன்மாதிரியைப் பிள்ளைகள் பின்பற்றும்படியாக கணவரிடம் எல்லா அன்பும், மரியாதையும், பணிவும், கீழ்ப்படிதலும் காண்பிக்கத் தீர்மானிக்கிறேன். பிள்ளைகள் தங்கள் தகப்பனோடு நல்லுறவு கொள்ள என்னாலான முயற்சிகளை எடுப்பேன். பிள்ளைகளிடம் அளவுக்கு மீறிப் பரிவு காட்டி கணவன் பொறாமைகொள்ள இடங்கொடுக்கமாட்டேன்.

**7.** வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலையை உருவாக்கத் தீர்மானிக்கிறேன். பிள்ளைகளோடு உட்கார்ந்து, பேசி, விளையாடிப் பொழுதுபோக்குவதை வீணென்று கருதமாட்டேன். அவர்கள் பள்ளியிலிருந்து திரும்பும்போது வீட்டிலிருப்பேன். அந்நாளின் விவரங்களை பகிர்ந்துகொள்வேன். அவர் கள் பேச்சைப் பொறுமையாய்க் கேட்பேன். என் மனநிலையினால் அவர்கள் பாதிக்கப்படாதபடி எப்பொழுதும் மகிழ்ச்சியாய்க் காணப்படுவேன். மாதம் ஒருமுறையாவது அவர்களை வெளியே அழைத்துச்செல்வேன்.

**8.** பிள்ளைகளின் ஆசிரியரோடு தொடர்புகொள்ளத் தீர்மானிக் கிறேன். ஆசிரியரின் குற்றச்சாட்டுகளை அசட்டை செய்யாமல் அதைத் தீர விசாரித்தறிந்து பிள்ளையைத் திருத்துவேன். அக்கம்பக்கத்தார்



குற்றஞ்சாட்டும்போது பிள்ளையின் பக்கமாய்ச் சாய்ந்து பேசாமல் உண்மையை ஒத்துக்கொள்வேன். பிள்ளையின் படிப்பில் கவனம் செலுத்துவேன். பால்வினை சம்பந்தமான காரியங்களைக்கூடத் தயங் காமல் பேசி அவர்கள் சந்தேகங்களைப் போக்கிடச் செய்வேன். அவர்கள் படிக்கும் புத்தகங்களைப் பரிசீலனை செய்வேன்; கேட்கும் கேள்விகளுக்குப் பொறுமையாய்ப் பதிலுரைபேன்.

**9.** குறைந்தபட்சம் ஆறு மாதம் தாய்பாலுட்டத் தீர்மானிக்கிறேன். உணவுக் காரியத்தில் அது வேண்டாம், இது வேண்டாம் என்று ஒதுக்காமல் வீட்டில் சமைக்கும் யாவற்றையும் வீணாக்காமல், முறுமுறுக்காமல், முகமலர்ச்சியோடு உண்ணப் பழக்குவேன். வீட்டில் சரிவிகித உணவு பரிமாறுவேன்.

**10.**பிள்ளைகளின் காரியங்கள் யாவற்றையும் நானே அவர்களுக்குப் பதிலாகத் செய்து, அவர்கள் வளர்ச்சியைத் தடுக்காதிருக்கத் தீர்மானிக் கிறேன். அவர்கள் வளர்ச்சிக்குத் தேவையான விடுதலையும் சுதந்திரமும் அளிப்பேன். எப்பொழுதும் பிடித்து வைத்துக்கொள்ளமாட்டேன். ஆனால், அதே சமயம் அவர்கள் நண்பர்கள், போகுமிடங்களைக் குறித்து நிர்விசாரமாயிருக்க மாட்டேன். நன்மையானதைத் தெரிந்துகொள்ளப் பழக்குவிப்பேன். தன் வேலையைத் தானே செய்யவும், வீட்டு வேலைகளில் பங்கெடுக்கவும் பழக்குவிப்பேன். கேட்டதற்கெல்லாம் ‘சரி’ சொல்லாமல் ‘இல்லை’ என்ற பதிலையும் மகிழ்ச்சியாய் ஏற்கப் பயிற்சிப்பேன். எளிய வாழ்க்கைத் தரத்தில் வளர்ப்பேன்.

---

*1 சாமு 1:22; 2 தீமோ 1:5; தீத்து 2:4,5; 1 தீமோ 5:10*

# 5
# சகோதரியின்தீர்மானங்கள்

**1.** என் சகோதரியைப் பாராட்டத் தீர்மானிக்கிறேன். அவளில் பாராட்டத்தக்கது எதையாகிலும் கண்டுபிடிப்பேன். அவளது வெற்றி களுக்கும் சாதனைகளுக்கும் மகிழ்ச்சியோடு கரம் குலுக்குவேன். அவளது உடல், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கண்டு பொறாமை கொள்ளமாட்டேன். அவளது வளர்ச்சிக்கு எவ்விதத்திலும் இடையூறாக இல்லாமல், அவளது திறமைகளை வளர்க்கவே உதவி செய்வேன். நான் எதிர்பார்த்த வேளையில் அவள் என்னை மெச்சிக்கொள்ளாததால் முகங்கோணமாட்டேன்.

**2.** என் சகோதரிக்கு நன்மையையே தேடத் தீர்மானிக்கிறேன். சிந்தனையிலும் அவளுக்குத் தீங்கு நினையாமலும், அவளுக்கு விரோதமாய்ப் பேசாமலும், பங்கம் விளைவிக்கும் எதையும் செய்யாமலும் இருப்பேன். அவளுக்கு உதவி செய்ய தருணத்தை எதிர்நோக்கி யிருப்பேன். அவள் என்னுடைய உதவியை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் கோபப்படாமல் மறுமுறை உதவ ஆயத்தமாயிருப்பேன்.

**3.** என் சகோதரியை மதிக்கத் தீர்மானிக்கிறேன். அவளது நிலை யையும், கொள்கைகளையும் மதிப்பேன். என் வார்த்தைகளினாலும் செய்கைகளினாலும் மரியாதை காண்பிப்பேன். அவள் என்னை அவ மதிக்கும்போது பொறுமையோடிருப்பேன். அவளைத் தனியே விட்டு விடாமல் அவளுக்குத் துணைநின்று ஆதரவளிப்பேன்.



**4.** என் சகோதரியைக் குறித்துப் புறங்கூறாதிருக்கத் தீர்மானிக் கிறேன். அவளைப் பற்றிப் பேசினால் நல்லவைகளை மட்டுமே பேசுவேன். பிறர் அவளைத் தூற்றிப் பேசும்பொழுது, பாதகமாய் ஒன்றும் கூறமாட்டேன். சாதகமாய்ப் பேச ஒன்றுமில்லாவிடில் மவுனம் சாதிப்பேன். அவள் என்னைக் குறித்துப் புறங்கூறும்பொழுது, அது உண்மைதானா என்று என்னையே ஆராய்ந்தறிந்து திருத்திக்கொள்வேன். பொய்யாய் இருக்கு மாயின் போராடாமல் தேவனே எனக்காய் வாதாடப் பொறுத்திருப்பேன்.

**5.** என் சகோதரியோடு சண்டை போடாமலிருக்கத் தீர்மானிக்கிறேன். அவளுக்கு கோபம் மூளுவதாகத் தெரிந்தால் நாவை அடக்கிக் கொள்வேன். என் வார்த்தைகளினால் அவளுக்கு எரிச்சல் மூட்டாமலும், அவளை அவமானப்படுத்தாமலும், மனமடியப்பண்ணாமலும் இருப்பேன். அவளது கடுமையான சொற்களுக்கு மெதுவான மாறுத்திரம் அளிப்பேன். அவள் என்னிடம் பேசுவதை நிறுத்திவிட்டால் நானே முதலாவது சென்று பேசிச் சமாதானத்திற்கு வழி வகுப்பேன்.

**6.** என் சகோதரியைச் சந்திக்கும்போது மகிழ்ச்சியை வெளிக்காட்டத் தீர்மானிக்கிறேன். முகமலர்ந்து சிரித்துப் பேசி விளையாடி அவளது சோர்வை மாற்ற முயற்சிப்பேன். அவள் என்னிடம் பட்சமாய்ப் பேசாதிருக் கும்போது அவளது ஆழ்ந்த மற்றப் பிரச்னைகளைப் புரிந்துகொள்ள முயற்சிப்பேன். என்னோடு அவளது உறவு சுமுகமாய் மாற ஜெபிப்பேன்.

**7.** என் சகோதரி எனக்குச் செய்த தவறுகளை மன்னித்துவிடத் தீர்மானிக்கிறேன். அவள் என் வாழ்க்கையில் விளைவித்த கேடுகளை மன்னிக்க, மறக்க முடியாத நிலையில் தேவ ஒத்தாசையை நாடி வெற்றி யெடுப்பேன். நான் அவளுக்கு இடையூறு விளைவித்துவிட்டதை உணர்ந் தவுடன் மன்னிப்புக் கோருவேன். அறியாமல் அவளைப் புண்படுத்தி யிருந்தாலும் அதை அறியவந்தவுடன் தாழ்மையுடன் அவளது மன்னிப்பிற் காக அவளை அணுகுவேன்.

**8.** என் சகோதரியைச் சகித்துக்கொள்ளத் தீர்மானிக்கிறேன். அவளது சிறு குறைகளைக் காணாதது போலிருப்பேன். எப்பொழுதுமே குற்றஞ் சாட்டிக்கொண்டும் குறைகூறிக்கொண்டும் இருக்கமாட்டேன். தேவன் அவளைப் பார்ப்பதுபோல் நானும் அவளைப் பார்க்க முயற்சிப்பேன். தைரியமாய், சாந்தமாய் அவளது பாவங்களை எடுத்துக்காட்டி அவள் நல்வழி எய்த உதவுவேன். அவள் என்னைக் குற்றஞ்சாட்டி, கோபித்து, திருத்தும்போது அதை நல்மனதாய் ஏற்றுக்கொள்வேன்.

**9.** என் சகோதரியை ஆவிக்குரிய வாழ்க்கையில் கட்டியெழுப்பத் தீர்மானிக்கிறேன். நான் கற்பதை அவளுக்கு ஆவிக்குரிய உதவி தேவைப் படும்பொழுது தயங்காமல் அளிப்பேன். என் தேவைக்கு அவளது உதவியை நாடி, என்னைத் தாழ்த்தி, அவள் தேவனிடத்தில் கற்றுக் கொண்டதை, நான் அவளிடத்திலிருந்து கற்றுக்கொள்ள முன்வருவேன்.

**10.** எனக்கும் என் சகோதரிக்குமுள்ள ஒருமனப்பாட்டை எப் பாடுபட்டும் காக்கத் தீர்மானிக்கிறேன். அற்ப வேறுபாடுகளைச் சட்டை செய்யாமலிருக்கக் கற்றுக்கொண்டு அவளுடன் ஐக்கியங்கொள்வேன். என்னுடைய நோக்கு, கொள்கைகளை ஒத்துக்கொள்ளும்படி அவளைக் கட்டாயப்படுத்தமாட்டேன். மனத்தாங்கல் ஏற்படும்போது திறந்த மன தோடு பேசி பூசல்களைத் தெளிவுபடுத்திக் காரியத்தைச் சரிசெய்ய அவளை அணுகுவேன்.

---

*லூக் 1:39-45; பிலி 4:2; 1 தீமோ 5:13; அப் 9:39*



# 6
# மனைவியின் தீர்மானங்கள்

**1.** முழு வேதத்தையும் ஒருமுறை இவ்வருடம் வாசித்து முடித்துவிடத் தீர்மானிக்கிறேன். தினம் 4 அல்லது 5 அத்தியாயங்கள் வாசிப்பேன். தொடர்பைக் காக்க அன்றாடப் பகுதிக்கடியில் தேதியைக் குறிப்பேன். மேலெழுந்தவாறு வாசிப்பதைத் தவிர்க்க ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் தலைப்பு தருவேன். தினம் ஒரு வசனமாகிலும் மனனம் செய்வேன்.

**2.** தூக்கநேரத்தை ஒழுங்குபடுத்தத் தீர்மானிக்கிறேன். ஐந்து மணிக்கு “அலாரம்” வைத்து, அதன் சத்தத்திற்குக் குதித்து எழுவேன். பத்து மணிக்கு முன் தூங்கவோ, பதினொன்றிற்குப் பிறகு விழித்திருக்கவோ மாட்டேன். பகலில் தூங்கமாட்டேன். விடுமுறை நாட்களிலும் இவ்வொழுங் கைக் கடைப்பிடிப்பேன்.

**3.** காலை 5-30 ஆனதும் முழங்காலை முடக்கிவிடத் தீர்மானிக் கிறேன். அதுபோல் இரவு 10-30க்குப் புத்தகங்களை வைத்துவிட்டு முழங்காற்படியிடுவேன். தற்பரிசோதனை செய்து அன்றைய பாவங்களை அறிக்கையிடுவேன். இந்தக் காலை மாலை அரைமணி நேரத்தை எதுவும் களவாட விடேன். மதியம் சிறிது நேரமாவது ஜெபிக்க முயல்வேன். நாட்குறிப்பேடு வைத்து என் தீர்மானங்களில் என் முன்னேற்றத்தைத் தினமும் குறிப்பேன்.

**4.** வீட்டில் யாவரோடும் சுமுகமான உறவோடிருக்கத் தீர்மானிக்கிறேன். பெற்றோர் சொல் தட்டாமல் நடப்பேன் (பாவமானவை தவிர). உடன் பிறந்தாரோடு சண்டையிடமாட்டேன். கூடுதல் அன்பை ஒவ்வொரு வருக்கும் காண்பிக்க முயற்சிப்பேன். வீட்டில் புதிய வேலை ஒன்றைத் தெரிந்தெடுத்து அதைச் சுத்தமாக, மகிழ்ச்சியாக, குறையின்றிச் செய்து, இப்படி வீட்டில் என் பொறுப்பையும், தாய்க்கு என் அன்பையும் காண்பிக்கத் தீர்மானிக்கிறேன்.

**5.** வகுப்பிலேயே மிக மோசமான, ஒருவேளை நடத்தைக்கெட்ட, படிப்பில் பின்தங்கின, அடங்காத பிள்ளையைத் தெரிந்தெடுத்து தினமும் அவளுக்காக ஜெபிக்கத் தீர்மானிக்கிறேன். அவளது தோழியாவதற்குச் சோர்ந்துபோகாமல் வலிய முயற்சிகளை எடுப்பேன். அவளுக்குப் படிப்பிலும், பாதுகாப்பிலும், ஆலோசனையிலும், நல்லொழுக்கத்திலும், தேவையானால் பணத்திலும் என்னாலியன்ற அளவு உதவுவேன். அவள் மனந்திரும்பியபின் ஊக்கமாய் அவளுடன் ஜெபித்து, வேதத்தில் எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் கற்றுக்கொடுத்து, சாட்சி சொல்லி விசுவாசத்தில் உறுதியாய் நிற்க ஊக்குவித்து அவளை வளர்ப்பேன்.

**6.** உடன் மாணவியர், ஆசிரியைகள், தலைமை ஆசிரியை அல்லது முதல்வரிடமிருந்து குணம், ஒழுக்கம், படிப்பு இவற்றில் நற்சான்று பெறத் தீர்மானிக்கிறேன். என்னிடம் அவர்களது மனப்பான்மை எப்படியிருப்பினும் வந்தனம் செலுத்தத் தவறமாட்டேன். ஒருவர் இருவரோடேயே ஒட்டிக் கொண்டிராமல் உடன் மாணவியர் யாவருடனும் நட்புக்கொள்வேன். ''நன்றி,'' ''மன்னிக்கவும்'' என்ற நற்பதங்களைச் சொல்லப் பழகி உறவுகளை இனிமையாக்குவேன்.

**7.** கடந்த ஆண்டைவிடக் குறைந்தது 10 சதவீதம் கூடுதல் உழைத்து, எல்லா பாடங்களிலும் 10 சதவீதம் கூடுதல் மதிப்பெண்கள் வாங்கத் தீர்மானிக்கிறேன். பரீட்சையில் தேறக் குறுக்கு வழியைக் கையாள மாட்டேன். தினமும் ஞானத்திற்காக ஜெபிப்பேன்.

**8.** என் உடலைத் தேவனது ஆலயமாகப் பேணத் தீர்மானிக்கிறேன். தினமும் குளித்து, அழகாய் அடக்கமாய் உடையுடுத்தி, முகத்தில் எப்பொழுதும் புன்சிரிப்பை அணிந்தவளாய்க் காணப்படுவேன். நகம் கடிக்கமாட்டேன். தலையைச் சொரியமாட்டேன். கூந்தலைப் பேனின்றிச் சுத்தமாக வைத்திருப்பேன். மூக்கைக் குடையமாட்டேன். நன்றாய்ச் சாப்பிட்டு, நன்றாய் விளையாடி, உடல் நலனைக் காப்பேன். விளையாட்டுப் பந்தயங்களில் ஒதுங்கி உடற்பயிற்சியை அசட்டை செய்யமாட்டேன். இச்சையான சோதனைகளுக்கு



உடலை விட்டுக்கொடுக்கமாட்டேன்.

**9.** சினிமா பார்க்கவோ, கெட்ட கதைப்புத்தகங்கள் படிக்கவோ மாட்டேனெத் தீர்மானிக்கிறேன். ஆபாசமான கதைகளைப் பேசமாட்டேன். கெட்ட வார்த்தைகள் என் வாயிலிருந்து வரவே வராது. பெரியோரை மதிப்பேன். பேருந்துகளில் எழுந்து நின்று முதியோருக்கும் பலவீனருக்கும் இடம் கொடுப்பேன்.

**10.** பயத்தை மனதிலிருந்து அகற்றத் தீர்மானிக்கிறேன். பிற்காலம், படிப்பு, பேய்ப்பிசாசு, பொல்லாதவர் குறித்த பயத்தையும் மூட நம்பிக்கை யான பயங்களையும் தூர எறிவேன். சோர்வு, சலிப்பு, பயம் என்னை மேற்கொள்ளும்போது தகுந்த வாக்குத்தத்தத்தைச் சொல்லி ஆர்ப் பரிப்பேன். யேகோவா நிசியின் கொடியை ஏற்றிப் பிடித்து எல்லாவற்றிற் கும் ஆண்டவரையே நம்பிச் சார்ந்துகொள்வேன்!

---

*மத் 15:4; எபே 6:1,2; நீதி 1:7; 1 கொரி 3:16,17*

# 7

# எஜமாட்டியின்தீர்மானங்கள்

**1.** என்னுடைய தலைவர் பரலோகத்திலிருக்கிறார் என்பதை எப் பொழுதும் நினைவிலிருத்தத் தீர்மானிக்கிறேன். நான் சரியாய் அதிகாரம் செலுத்தும்படியாக, ஒழுங்கிலும் கடமையிலும் எனக்குக் கீழப்பட்டோருக்கு நானே முன்மாதிரியாயிருப்பேன்.

**2.** தாழ்மையோடு நடந்துகொள்ளத் தீர்மானிக்கிறேன். நான் இருக் கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன் என்பதை ஒருபோதும் மறக்கமாட்டேன். பிறருக்கு முன்பாகவோ என் பணியாளருக்கு முன் பாகவோ என்னை உயர்த்திக்கொள்ளமாட்டேன். என் அந்தஸ்திற்காக தேவனைத் துதிப்பேனேயல்லாமல், என் சுயஞானத்தினாலோ, முயற்சி யாலோ இந்நிலைமை எய்தினேனென்று ஒருபோதும் எண்ணமாட்டேன்.

**3.** எனக்குக் கீழ்ப்பட்டோரிடமிருந்து வேலை வாங்குவதில் அயரா திருக்கத் தீர்மானிக்கிறேன். கண்டுங்காணாமல் இருக்கமாட்டேன். ஆனால் கரிசனை காட்டுவேன். உடல் வலிமைக்கோ சிந்தனை சக்திக்கோ மிஞ்சின வேலை சுமத்தமாட்டேன்.

**4.** ஏற்ற வேளையில் பணியாளரைப் பாராட்டத் தீர்மானிக்கிறேன். அவர்களுக்கே உரித்தான பாராட்டைப் பிறருக்கு முன்பாகச் சூடிக்



கொள்ளாமல், அவர்கள் வேலைக்குரிய புகழை அவர்களுக்கே அளிப்பேன். அவர்களது தாலந்துகளைக் கண்டுபிடித்து, அவைகளை முன்னேற்றவும் பெருக்கவும் ஆவன செய்வேன். அவர்களது ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளத் தயங்கமாட்டேன்.

**5.** தேவன் எனக்குக் கொடுத்துள்ள அதிகாரத்தை தவறாய்ப் பயன் படுத்தாதிருக்கத் தீர்மானிக்கிறேன். என் சொந்த ஆதாயத்திற்காக எனக்குக் கீழ் பணியாற்றுவோரைப் பயன்படுத்தமாட்டேன். என் அதிகாரத்தின் வரம்பை மீறிவிடாதிருக்க எச்சரிக்கையாயிருப்பேன். பணியாளரிடையே பாரபட்சம் காட்டாதிருப்பேன்.

**6.** பண ஆசைக்கு அடிமைப்படாதிருக்கத் தீர்மானிக்கிறேன். என் வருமானத்தில் தாராளமாயிருப்பேன். ஏழைகளுக்குத் தாராளமாய்க் கொடுப்பேன். என் பணிப்பெண்ணுக்கு உரியதையோ, அவளுக்குச் சேர வேண்டியதையோ கொடுக்காமல் நிறுத்திவைக்க மாட்டேன். நியாயமான கூலியை ஏற்றவேளையில் கொடுத்துவிடுவேன்.

**7.** எனக்குக் கீழ் வேலை செய்வோரைப் புரிந்துகொண்டு நடத்தத் தீர்மானிக்கிறேன். என் வேலைக்காரி வியாதிப்பட்டால் உடனே நடிக்கிறாள் என்று முடிவுகட்டாமல், அவளது துன்பத்தைப் புரிந்துகொண்டு என்னால் முடிந்த அளவு உதவிசெய்வேன்.

**8.** எனக்குக் கீழ்ப்பட்டோரின் ஆவிக்குரிய நன்மைகளுக்காகக் கரிசனை காட்டத் தீர்மானிக்கிறேன். அவர்களோடுள்ள என் ஈடுபாடு எல்லாவற்றிலும் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துவேன். என் வேலைக்காரிக்காகவும் அவளது குடும்பத்திற்காகவும் ஜெபித்து, அவர்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பை அடைய என்னாலான முயற்சிகளை எடுப்பேன்.

**9.** என் வேலைக்காரியை எந்தக் காரணத்தாலும் கொடூரமாக நடத்தாதிருக்கத் தீர்மானிக்கிறேன். அவளை அடிக்கவோ, உதைக்கவோ, கடுஞ்சொல் சொல்லி ஏசவோ மாட்டேன். பயமுறுத்தமாட்டேன். அவளை ஒரு அடிமையைப்போல நடத்தாமல் என்னைப் போன்ற மற்றொருத்தியாக மதித்து, பணிப்பெண்ணைப் போல நடத்துவேன். அவளைக் குறித்து என் காதுக்கு வரும் கெட்ட வதந்திகளை ஆராய்ந்து அறியுமுன் நம்பி விடமாட்டேன். அவளுடைய உதவிக்காகத் தேவனைத் துதித்து அவ் வப்பொழுது அவளுக்கு நன்றியும் சொல்வேன்.

**10.** மற்றொரு எஜமாட்டியின் வேலைக்காரியை விரும்பாதிருக்கத் தீர்மானிக்கிறேன். என்னிடம் வந்தால் கூடுதல் ஆதாயமுண்டு என்று கூறி இழுக்கமாட்டேன். பிறருடைய வேலைக்காரியை குற்றஞ்சாட்டாமலும் தீர்ப்பிடாதிருக்கவும் தீர்மானிக்கிறேன்.

---

*எபே 6:9; ரோ 14:4; மத் 8:5,6; நீதி 31:15*



# 8
# பணிபுரியும் பெண்ணின் தீர்மானங்கள்

**1.** தேவனுக்கு முதலிடம் கொடுத்துவிடத் தீர்மானிக்கிறேன். தேவனுக்கும் குடும்பத்திற்கும் அடுத்த இடமே வேலைக்கு அளிப்பேன். நேரமில்லை, களைப்பாயிருக்கிறது, அதிக வேலை என்றெல்லாம் கார ணம் காட்டித் தியான வேளையை அசட்டை செய்யமாட்டேன். வேலைத் தலத்தில் தினமும் ஒருவருக்காவது சாட்சி பகர ஆயத்தமாயிருப்பேன். ஞாயிற்றுக்கிழமையை ஓய்வு நாளென்று தூங்கிக் கழிக்காமல் தவறாமல் ஆலயம் செல்வேன்.

**2.** குடும்பத்திற்கு அடுத்த இடம் கொடுக்கத் தீர்மானிக்கிறேன். குடும்பத்தைக் கவனியாததற்குச் சாக்கு சொல்லமாட்டேன். நேரம் வீணா காதபடி அடுத்த நாளுக்குரிய காரியங்களை முந்தின நாளே திட்டமிடத் தீர்மானிக்கிறேன். வேலையிலிருந்து திரும்பியவுடன் முகம் கழுவி வீட்டில் மலர்ச்சியோடு காணப்படுவேன். வேலையின் கவலை, பாரம். கோபங்களை வீட்டிற்குச் சுமந்து வரமாட்டேன். கூடுதல் சம்பளத்தை நாடி கணவ னையோ பிள்ளைகளையோ விட்டுப் பிரிவதில்லை எனத் தீர்மானிக்கிறேன்.

**3.** வேலை நேரத்தில் கருமமே கண்ணாயிருப்பேனெனத் தீர்மானிக் கிறேன். மேலதிகாரி இருந்தாலும் இல்லாவிட்டாலும், என் வேலையைச் சுத்தமாகவும், ஒழுங்காகவும், பிழையின்றியும், என் முழுத் திறமையோடு செய்வேன். வேலைக்குக் பிந்திச் செல்லமாட்டேன். வேலை நேரத்தைச்

சொந்தக் காரியத்திற்காகப் பயன்படுத்தாமலும், பகற்கனவு, அரட்டை, தூங்கி வழிதலில் வீணாக்காமலும் இருப்பேன். நேர்மையான சான்றும் சுத்தமான சாட்சியும் பெறத் தீர்மானிக்கிறேன். பொய்க் கையெழுத்திடவோ, பொய்ச்சான்றிதழ் அளிக்கவோ மாட்டேன். சட்டத்துக்கு விரோதமாக அலுவலகப் பொருட்களைச் சொந்த உபயோகத்திற்கு எடுக்கமாட்டேன். அலுவலகச் சட்டதிட்டங்களுக்கு மனமுவந்து கீழ்ப்படிவேன்.

**4.** நல்லவர்களுக்கும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரமல்ல, முரட்டுக்குணமுள்ள மேலதிகாரிகளுக்கும் கீழ்ப்படியத் தீர்மானிக்கிறேன். அவர்களிடம் விவாதிக்கவோ, சண்டையிடவோ மாட்டேன். அவர்களுக்குப் பயந்து மரியாதையோடு நடந்துகொள்ளுவேன். முறுமுறுப்போடும், தயக் கத்தோடும், எரிச்சலோடுமல்ல, முழுமனதோடும் பணிவோடும் கீழ்ப் படிவேன். மற்றவர்களுக்கு மேலாக நான் மதிப்புப் பெறும்படி அதிகாரி முன் பொய்யாய் முகஸ்துதி பாடமாட்டேன். அவரைக் குறித்துப் புறங் கூறமாட்டேன்.

**5.** அதிகாரிகளை தேவனது பிரதிநிதிகளாகக் கணித்து அவர்களது ஒவ்வொரு நடவடிக்கையையும் கேள்வி கேட்காதிருக்கத் தீர்மானிக் கிறேன். மேலதிகாரியைத் தாண்டி, அவருக்கும் மேலதிகாரியினிடத்திற்கு குறுக்கு வழியில் எடுத்ததெற்கெல்லாம் செல்லமாட்டேன். அதிகாரிகள் மூலமாய்த் தேவன் என்னை நடத்தும்படியாக நாள்தோறும் அவர்களுக்காக ஜெபிப்பேன். அதிகாரிகளின் பாவக் கட்டளைகளுக்குப் பணிய மறுத்து தைரியமாக என் உத்தமத்தில் நிற்பேன். தைரியமாக ஜெபத்துடனும் அன்புடனும் தனிமையில் அவர்கள் குற்றங்களை எடுத்துரைப்பேன். வேலையில் சிறு பிரச்னைகளுக்கும் மாம்சீக முறைகளைக் கையாடாமல் தேவனுக்கு ஜெபத்தில் தெரியப் படுத்துவேன்.

**6.** என் பாடுகளுக்குரிய பலனைத் தேவனிடத்திலிருந்தே எதிர் பார்க்கத் தீர்மானிக்கிறேன். என் நிலைமைக்காக மேலதிகாரிகளைக் குற்றஞ்சாட்டவோ நியாயந்தீர்க்கவோ செய்யாமல் காரியத்தைக் கர்த்தர் கரத்தில் ஒப்புவிப்பேன். பதவி உயர்வுக்கு தேவனையே நோக்கியிருப்பேன். என் தவறுகளைப் பயப்படாமல் ஒத்துக்கொண்டு அதற்குரிய தண்ட னையை முகங்கோணாமல் ஏற்றுக்கொள்வேன்.

**7.** சக ஊழியருடன் நல்லுறவை நிலைநாட்டத் தீர்மானிக்கிறேன். தினமும் காலையில் புன்முறுவலோடு ஒவ்வொருவரையும் வாழ்த்துவேன். கூடுமான போதெல்லாம் அவர்களுக்கு உதவத் தயங்கமாட்டேன். அவர்களை



நியாயந்தீர்க்கவோ அவர்களின் குற்றங்களை மேலதிகாரி களுக்குக் காட்டிக் கொடுக்கவோ அவசரப்படமாட்டேன். அவர்களுக்குப் புத்தி சொல்லப் பயப்படமாட்டேன். அவர்களின் புத்திமதிகளை ஏற்றுக்கொள்ளத் தயங்க மாட்டேன். பிறர் வேலையைப் பழிக்கமாட்டேன்; என் வேலையைக் குறித்து வீண் பெருமிதம் கொள்ளமாட்டேன்.

**8.** மறு பாலரான சக ஊழியர், அதிகாரிகளிடம் கவனமாய் நடந்து கொள்ளத் தீர்மானிக்கிறேன். அவர்களுக்குச் சோதனையாகிவிடாதபடி எச்சரிக்கையாயிருப்பேன். எல்லாப் பரிசுத்தத்தோடும் கூடிய நட்புறவே யன்றி வேறே தொடர்புகளைத் தவிர்ப்பேன். இச்சையான மனிதரை விட்டு விலகுவேன்.

**9.** என் வருமானத்தைக் குறித்து கவனமாயிருக்கத் தீர்மானிக்கிறேன். அதைச் சுயநலமாகச் செலவழிக்கமாட்டேன். அதை வீட்டிற்குக் கொண்டு வந்து கணவரிடம் (பெற்றோரிடம்) கொடுத்து ஜெபித்து, துதி செலுத்திய பின்னர் அவரது வருமானத்தோடுகூட மாத செலவைக் கணக்கிடுவேன். குறைந்த பட்சம் பத்தில் ஒரு பகுதியைத் தேவனுக்குக் கொடுத்துவிடத் தீர்மானிக்கிறேன். ஏழைகளுக்கென்று ஒரு பகுதியை ஒதுக்குவேன். உடன் ஊழியரின் தகுதிக்கு நிகராயிருக்க வேண்டுமென்று இச்சிக்கவோ, கடனுக்குப் பொருட்கள் வாங்கித் துன்பப்படவோ மாட்டேன். என் நன்றிக்கு அடையாளமாகத் தேவையிலிருக்கும் என் பெற்றோருக்குச் சிறு தொகை யாகிலும் அனுப்புவேன்.

**10.**என்னைக் குறித்த தாழ்வு மனப்பான்மையை அகற்றிவிடத் தீர்மானிக்கிறேன். நான் உதவாக்கறை என்றும் என் வேலை பயனற்றது என்றும் பிசாசு சொல்லும் பொய்யை நம்பாமல் என் கையில் கொடுக்கப் பட்டதெதுவோ அதை முழுச் சக்தியோடும் செய்வேன். பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளத் தயங்கமாட்டேன். என் கையின் வேலைகளைக் குறித்து தேவன் கொடுத்துள்ள வாக்குத்தத்தங்களை உரிமைப்பாராட்டி அவரு டைய பெலத்தினால் எந்தச் சோர்வையும் சந்தித்து மேற்கொள்ளத் தீர்மானிக்கிறேன்.

---

*யாத் 1:17-20; எபே 6:5-8; 1 பேது 2:18-20; 2 இராஜா 5:1-4*

# 9
# சபை அங்கத்தினரின் தீர்மானங்கள்

**1.** குடும்பத்துடன் வாராவாரம் ஆலயத்திற்குச் செல்லத் தீர்மானிக்கிறேன். பிந்திச் செல்லமாட்டேன். ஆராதனை முடியுமுன் எழுந்து வர மாட்டேன். நானோ என் குடும்ப அங்கத்தினரில் எவருமோ ஆராதனை யின்போது யாருக்கும் கவனத்தைச் சிதறச் செய்கிறவர்களாயிருக்க மாட்டோம்.

**2.** பிரசங்கத்தை ஒழுங்காகக் கவனித்துக் குறிப்பெடுக்கத் தீர்மானிக்கிறேன். அதை வீட்டில் படித்து நல்ல கருத்துக்களை ஏற்ற சமயங்களில் பிறரோடு பகிர்ந்துகொள்வேன். பிரசங்கத்தை முதலாவது எனக்கென்றே எடுத்துக்கொள்வேன். பிரசங்கத்தைக் குறைகூறமாட்டேன். பாடல், ஆராதனை, பிரசங்கம், ஜெப வேளைகளில் தூங்காமல், பகற்கனவு காணாமல், கண்களை அலையவிடாமல் கவனமாயிருப்பேன். பாடல் களைக் கருத்து உணர்ந்து பாடுவேன்.

**3.** சபையின் தலைமைக்குப் பணிந்து நடக்கத் தீர்மானிக்கிறேன். எளிமையான ஆவியோடு திருத்தங்களை ஏற்றுக்கொள்வேன். தலைவர் களைப் புறங்கூறமாட்டேன். மதிப்பேன். என் சிக்கல்களுக்கு அவர்கள் உதவியை நாடுவேன்.

**4.** சபையின் உடன் அங்கத்தினருக்கு முன்மாதிரியாயிருக்கத் தீர்மானிக்கிறேன். என் ஒவ்வொரு வார்த்தையைக் குறித்தும் எச்சரிக் கையாயிருப்பேன். எல்லாவற்றிலும் பரிசுத்தமாய் நடந்துகொள்ளுவேன்.



ஆவிக்குரிய தீர்மானங்களில் எடுத்துக்காட்டாக விளங்குவேன். நல்லுறவு இல்லாத எந்த அங்கத்தினருடனும் உடனே ஒப்புரவாகத் தீர்மானிக்கிறேன். மேலோட்டமான, மாய்மாலமான உறவுகளைத் தவிர்ப்பேன்.

**5.** சபையில் உற்சாகமாய்ப் பங்கேற்கும் அங்கத்தினராயிருக்கத் தீர்மானிக்கிறேன். சபையின் சேவையில் கூடுமான அளவு பங்கெடுக்கத் தீர்மானிக்கிறேன். வாரத்தில் குறைந்த பட்சம் ஒரு ஆத்துமாவையாவது ஆதாயப்படுத்தி, ஆலயத்திற்கு அழைத்து வர என்னால் முடிந்த அளவு முயற்சி எடுப்பேன். நற்செய்திக் கைப்பிரதிகள் விநியோகம் செய்வேன். சுவிசேஷப் புத்தகங்கள் விற்பேன். ஒவ்வொரு வாரமும் கர்த்தருக்கென்று காணிக்கை கொண்டு வருவேன். ஊழியக்காரரின் தேவைக்கும், சபையின் தேவைக்கும் நற்செய்தி ஊழியங்களுக்கும் தாராளமாய்க் கொடுப்பேன்.

**6.** என் சபைக்காக ஊக்கமாகவும் ஒழுங்காகவும் ஜெபிப்பேன். மேய்ப்பருக்காக ஜெபிப்பேன். அங்கத்தினருக்காகவும் ஜெபிப்பேன். சபையின் நற்செய்தி ஊழியங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும் ஜெபிப்பேன். சபையின் எழுப்புதலுக்காக மன்றாடுவேன். சபையில் பாவத்தில் வாழ்பவரைக் குறித்துப் பேசி அலையாமல் அவர்களுக்காக ஜெபிப்பேன். சபையின் வாலிபர், சிறுவரின் மனந்திரும்புதலுக்காக ஜெபிப்பேன்.

**7.** சபையின் சகோதரிகளுக்கு ஆவிக்குரிய உதவியாயிருக்கத் தீர்மானிக்கிறேன். அவர்களது பாவங்களைச் சுட்டிக்காட்டத் தயங்காமல், பயப்படாமல் தனிமையில் அதைக்குறித்து அவர்களோடு ஜெபத்தோடும் அன்போடும் பேசுவேன். வாலிபப் பெண்களுக்குப் புத்தி சொல்வேன். சிறுவருக்கு வேதாகமக் கதைகளைப் போதிப்பேன். ஆவிக்குரிய புத்தகங் களைக் கொடுத்துதவுவேன்.

**8.** தேவையிலுள்ள உடன் அங்கத்தினருக்கு சரீர உதவிகளையும் பொருளுதவிகளையும் செய்யத் தீர்மானிக்கிறேன். அவர்களது தேவை களைச் சந்திக்க தியாகம் செய்யத் தயங்கமாட்டேன். வீட்டில் என்னால் கொடுக்கக் கூடிய துணிகளையும் பொருட்களையும் கொடுப்பேன். அவர்களது வியாதிப் படுக்கையில் துணை புரிவேன்.

**9.** மற்ற சபை அங்கத்தினரோடு சுமுகமாகப் பழகத் தீர்மானிக்கிறேன். புன்முறுவலோடு அவர்களை வாழ்த்துவேன். அவர்களோடு ஐக்கியம் கொள்ளத் தயங்கமாட்டேன். அவர்களை என் சபை அங்கத்தினராய் மாற்றிவிட முயற்சி செய்யமாட்டேன். கிறிஸ்துவின் சரீரத்தின் ஒருமனப்

பாட்டைக் கெடுக்கும் சின்னஞ்சிறிய காரியங்களையெல்லாம் விவாதித்து சண்டை போடாதிருப்பேன். பிற சபைகளின் நம்பிக்கைகளைக் கேலி செய்யாமல் மதிப்பேன்.

**10.** சிறப்புக் கூட்டங்கள், ஆவிக்குரிய பொதுக்கூட்டங்கள், (பிற சபைகள் நடத்தினாலும்) புத்தகங்கள், பத்திரிகைகள், வானொலி, ஒலி-ஒளிநாடாக்கள் ஆகியவை மூலம் என் ஆவிக்குரிய வாழ்க்கையை வளர்த்துக்கொள்ளத் தீர்மானிக்கிறேன். அவைகளின் மூலம் கற்றுக் கொள்ளும் சத்தியங்களை வேதாகமத்தில் ஆராய்ந்து அறிவேன். பொய் உபதேசங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருப்பேன். மிஷனரிச் சங்கங் களையும், வேதாகமச் சங்கங்களையும், இதர உள்ளூர் ஊழியங்களையும் என்னால் இயன்ற அளவிற்குத் தாங்குவேன்.

---

*1 தீமோ 4:12; பிலி 4:3; அப் 16:14,15; யாத் 35:22,26*



# 10
# மங்கையின் தீர்மானங்கள்

**1.** இளமைக்குரிய இச்சைகளுக்கு விலகியோடத் தீர்மானிக்கிறேன். என்னுடைய சிந்தனைகளைத் தூய்மையாகக் காத்துக்கொள்ள விடா முயற்சி எடுப்பேன். சோம்பலாயிருந்து சிந்தனைகளை அலையவிட மாட்டேன். என் உடலைப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்வேன். கணவன் தவிர வேறு யாரும் என் உடலை உபயோகிக்கத் தரமாட்டேன். தேவையற்ற ஒரு தொடுதலையும் தவிர்ப்பேன். இச்சையான பார்வையைத் தவிர்க்க என் கண்களோடு உடன்படிக்கை பண்ணுகிறேன்.

**2.** உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் படங்கள், கதைகள், உரையாடல் கள், வார்த்தைகள், விளையாட்டுப் பேச்சுகள், பாவனைகளைத் தவிர்க்கத் தீர்மானிக்கிறேன். பாவத்திற்கு என்னை நடத்தக்கூடிய நபர்களையும் இடங்களையும் தவிர்ப்பேன். காலைதோறும் ஆண்டவரிடம் கிருபைக் காய்க் கேட்பேன்; இரவில் என்னை ஆராய்ந்துப்பார்த்து முழுமனதோடு என் பாவங்களை அறிக்கையிட நேரம் ஒதுக்கத் தீர்மானிக்கிறேன். பாவத்திற்கு வேறு பெயர் சூட்டி என்னையே ஏமாற்றிக்கொள்ளாமல், பாவத்தைப் பாவமென்று ஒத்துக்கொள்ளத் தீர்மானிக்கிறேன். என் மனச்சாட்சிக்குக் கீழ்ப்படிந்து அதைக் கூர்மையாக வைத்துக்கொள்வேன்.

**3.** என் பழைய பாவங்களைக் குறித்துச் சாத்தான் என்னைக் குற்றஞ்சாட்ட இடங்கொடாமல், கடந்தகாலக் காரியங்களைப் புதைத்து

விடத் தீர்மானிக்கிறேன். நடந்து முடிந்ததை நினைத்துக் கண்ணீர்விட்டு காலத்தையும் சக்தியையும் வீணாக்காமல் கர்த்தருக்குள் என்னைத் திடப்படுத்திக்கொண்டு அனுதினமும் முன்னேறிச் செல்வேன். என் பாவத்தை ஆராய்ந்துப்பார்த்து என்னை வீழ்ச்சிக்கு வழிநடத்தின காரணத்தைக் கண்டுபிடித்து வரும் நாட்களில் எக்காரணத்தை முன்னிட்டும் அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகாதபடி நடந்துகொள்வேன்.

**4.** வலது கண்ணைப்போல முக்கியமாகத் தோன்றினாலும், பரி சுத்தமற்ற எந்த உறவையும் துண்டித்துவிடத் தீர்மானிக்கிறேன். அதன் விளைவுகளைத் தேவன் பொறுப்பெடுத்துக்கொள்ள அவரை விசு வாசிப்பேன். என்னையே ஏமாற்றிக்கொண்டு அப்படிப்பட்ட உறவை வளர்க்காமல் என்னைக் கடுமையாய் நடத்துவேன். சோதனையில் விடுதலையில்லாமல் பாவத்தில் விழுந்துவிடுவேனோ என்ற பயம் ஏற்படும்பொழுது நம்பகமானதோர் மூத்த சகோதரியின் உதவியை நாடுவேன்.

**5.** எந்த மனிதனையும் சோதனைக்குட்படுத்தாதிருக்கத் தீர்மானிக் கிறேன். கண்ணியமாய் உடை உடுத்தி எவரோடும் என் நடவடிக்கை களில் மிகுந்த எச்சரிக்கையாயிருப்பேன். ஒருவருக்கு என்மேல் விருப்ப மிருப்பதாக உணர்வேனானால் அவருக்காக ஜெபித்து அவரை விட்டு விலகுவதினால் அவருக்கு ஒத்தாசை செய்வேன். அதனால் அவர் மனம் நொந்தாலும் அதைப் பொருட்படுத்தமாட்டேன். அவரோடு தனித் திருப்பதைத் தவிர்ப்பேன்.

**6.** என் தோழியின் கணவரோடு கண்ணியமான தூரத்தில் நின்றே பழகத் தீர்மானிக்கிறேன். என் தோழியை இக்காரியத்தில் வஞ்சிக்க மாட்டேன். கணவர்தான் எனக்கு அதிகப் பழக்கமானவராயிருந்தாலும், கணவன் மனைவி இருவரையும் ஒன்றாகவே ஏற்று உபசரிப்பேன். அவருடைய மனைவியின் பொறாமையைத் தூண்டி விடாமலிருப்பேன்.

**7.** கற்பில் விசுவாசிகளுக்கு முன்மாதிரியாயிருக்கத் தீர்மானிக்கிறேன். எனக்குப் பாவமாகத் தோன்றாவிட்டாலும், அவர்களுக்கு இடையூறா யிருக்கும் எதையும் தியாகம் செய்வேன். தேவனிடமிருந்தும் மனிதரிட மிருந்தும் நற்சாட்சி பெறுவேன். என் குணத்தில் சந்தேகத்திற்குரிய வைகூடக் காணப்படாமல் பார்த்துக்கொள்வேன். பிறர் கண்டிக்கும்போது பணிவோடு ஏற்றுக்கொள்வேன்.

**8.** வேறொரு பெண் என் வாழ்க்கையில் குறுக்கிடும்போது மன முடைந்து



ஓடிவிடாதிருக்கத் தீர்மானிக்கிறேன். கணவனைக் குற்றஞ் சாட்டி நியாயந்தீர்த்து பழிசாட்டிக்கொண்டேயிராமல் ஞானமாய் நடந்துகொண்டு அவர் அப்பாவத்திலிருந்து விடுபட ஒத்தாசை புரிவேன். என்னைச் சுற்றியுள்ள பொல்லாத பெண்களைக் குறித்து எச்சரிக்கை யாயிருந்து நான் என் கணவருக்குப் பாதுகாவலென்பதை மறந்து போகாதிருப்பேன். புறாவைப்போல கபடமற்றவளாகவும் பாம்பைப்போல வினாவுள்ளவளாகவும் இருப்பேன். கணவரின் பழைய பாவங்களை மன்னித்து அவருக்கு எப்பொழுதும்போல் கீழ்ப்படிந்து மரியாதையுடன் நடந்துகொள்வேன்.

**9.** எந்தத் தேவ ஊழியக்காரனையும் தேவதூதனென்று எண்ணாமல் விழுந்துபோகக்கூடிய மனிதனாகவே நோக்கத் தீர்மானிக்கிறேன். ஊழி யக்காரரோடு தனிப்பட்ட உறவு உருவாக்குவதைத் தவிர்ப்பேன். கடித மெழுதினாலும் அவை குறிப்பாக சுருக்கமாக இருக்கும்.

**10.** பரிசுத்தத்தையே என் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ளத் தீர்மானிக்கிறேன். ஒரு மாது எவ்வளவுக்கெவ்வளவு பரிசுத்தமாயிருக் கிறாளோ அவ்வளவுக்கவ்வளவு தன் பெண்மையைக் காத்துக்கொள் ளுகிறாளென்பதை உணர்ந்துகொள்ளுகிறேன். "அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு;" நானோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவளாவதையே தீர்மானமாகக்கொள்ளுகிறேன்!

---

*2 தீமோ 2:22; 1 கொரி 7:2-5; யாத் 20:14; யோவா 8:11*

# 1 1
# பாட்டியம்மாவின் தீர்மானங்கள்

**1.** “ஆண்டவரே, என்னை எடுத்துக்கொள்ளும்” என இனி ஜெபிக் காதிருக்கத் தீர்மானிக்கிறேன். என்னை எப்பொழுது எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆண்டவருக்குத் தெரியும். அதை நான் அவருக்குச் சொல்லத் தேவையில்லை. அவர் என்னை இந்த உலகில் வைக்குமளவும் மனமகிழ்ச்சியோடு வாழ்ந்து அவரது சித்தத்தை நிறைவேற்றத் தீர் மானிக்கிறேன்.

**2.** என் வியாதியைக் குறித்தே பேசிக்கொண்டிருக்கக்கூடாதென்று தீர்மானிக்கிறேன். கடவுளிடம் எனது பலவீனத்தைச் சொல்லுவேன். என் பிரச்னையை விவரித்துப் பிறர் நேரத்தை வீணாக்கமாட்டேன். யாராவது “எப்படி இருக்கிறீர்கள் பாட்டியம்மா?” என்று கேட்டால் “ஓ, நன்றாக இருக்கிறேனே, நீ எப்படி இருக்கிறாய்?” எனப் பதிலளிக்கத் தீர்மானிக் கிறேன். விருப்பப்படி ஆகாரம் புசியாமல் வியாதிக்கேற்றபடி சாப்பிடத் தீர்மானிக்கிறேன்.

**3.** முறுமுறுக்காமலிருக்கத் தீர்மானிக்கிறேன். என்னை யாரும் மதிப்பதில்லை; என் புத்திமதியைக் கேட்பதில்லை; எனக்குப் பொறுப்பு எதுவும் கொடுப்பதில்லை; ஏதாவது உதவி செய்தாலும், “நீங்கள் சும்மா இருந்தால் போதும்” என்கிறார்கள். இதையெல்லாம் நான் பெரிதாக நினைக்கக்கூடாது,



கோபப்படக்கூடாது என்று தீர்மானிக்கிறேன். பிறரைக் குற்றஞ்சாட்டுவதில்லை எனத் தீர்மானிக்கிறேன்.

**4.** பிறருக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது எனத் தீர்மானிக் கிறேன். என்னைக் குறித்தே நான் கவலைப்படுவதினால்தான் பிறருக்குத் தொல்லையாகிறேன். என்னை மறந்து, பிறருக்கு என்னாலான உதவியைச் செய்யத் தீர்மானிக்கிறேன். என்னாலானமட்டும் என் காரியங்களை நானே கவனித்துக் கொள்ளத் தீர்மானிக்கிறேன்.

**5.** அதிகமாய் ஜெபிக்கத் தீர்மானிக்கிறேன். எனக்கு பொறுப்பு குறைவு, நேரமோ அதிகம். ‘பொறுப்பு அதிகம், நேரமில்லையே’ என அநேகர் தவிக்கும்போது தேவன் எனக்கு அருளிய இந்தக் கிருபைக்காக அவரைத் துதித்து குடும்பத்திற்காகவும், சபைக்காகவும், ஆத்துமாக்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபிக்கத் தீர்மானிக்கிறேன். கிழவிப்பேச்சு களுக்கு விலகியிருக்கத் தீர்மானிக்கிறேன்.

**6.** பேரப்பிள்ளைகளுக்கும் மற்ற சிறுவர் சிறுமியருக்கும் கதைகள் சொல்லத் தீர்மானிக்கிறேன். எவ்வளவு உற்சாகமாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு உற்சாகமாக வேதக் கதைகளைச் சொல்லத் தீர்மானிக்கிறேன்.

**7.** எனது பிள்ளைகளுக்கு என்னாலானமட்டும் பயன்படத் தீர்மானிக் கிறேன். பேரப் பிள்ளைகளுக்குப் படித்துக்கொடுப்பது, பொழுதுபோக்க உதவுவது, வீட்டைப் பார்த்துக்கொள்வது போன்ற உதவிகளைச் செய்யத் தீர்மானிக்கிறேன்.

**8.** கண் மங்கிவிட்டது என விட்டுவிடாமல் பெரிய எழுத்து வேதாகமம் ஒன்று வாங்கிப் படிக்கத் தீர்மானிக்கிறேன்.

**9.** என் சொத்துகளை ஞானமாய்ப் பயன்படுத்தத் தீர்மானிக்கிறேன். விட்டுச் செல்லும் சொத்தை தேவ விருப்பம் அறிந்து பகிர்ந்தளிக்கத் தீர்மானிக்கிறேன். கடவுளுக்கென்று பத்தில் ஒன்றுக்கு குறையாமல் எழுதி வைப்பேன். பிள்ளைகளுக்குப் பாரபட்சமின்றிப் பங்கிடுவேன். ஞானமாய் தேவ பக்தியோடு செய்யக்கூடியவர் கையில் சொத்துப் பொறுப்புகளை ஒப்படைக்கத் தீர்மானிக்கிறேன்.

**10.** எதிர்காலத்தையும் மரணத்தையும் குறித்துப் பயப்படாமலிருக்கத் தீர்மானிக்கிறேன். அவற்றை தைரியமாகச் சந்திக்கத் தீர்மானிக்கிறேன்.

தனிமையிலோ, மகன் வீட்டிலோ, ஒவ்வொரு பிள்ளை வீட்டிலும் சில காலமோ, முதியோர் இல்லத்திலோ, கடவுள் எப்படி நடத்தினாலும் சமாளித்துக்கொள்ள என்னைத் தைரியப்படுத்திக்கொள்ளுகிறேன். மரணமே ஜீவனுக்கு வாசல் என்று அறிந்து வியாதியோ, பலவீனமோ, படுக்கையோ எல்லாவற்றிலும் ஸ்தோத்திரம் செய்து தேவனை மகிமைப்படுத்தத் தீர்மானிக்கிறேன்.

---

*2 தீமோ 1:5; 1 தீமோ 4:7; ஏசா 46:4; லூக் 2:37*

# மகஹீன் தீர்மானங்கள்

*னுச. ஸீல்ஸீயன் ஸ்டான்ஸீ*

**1.** எனது பெற்றோரைக் **கனம்பண்ணத்** தீர்மா வீக்கிறேன். எனது சொல்ஸீனாலோ செயஸீனாலோ அவர்களை அவமணிக்கமாட்டேன். கோபத்ணில் அவர் களை அவமணித்ணிருந்தால் மன்வீப்புக் கோருவேன். அனுணின உணஷி, உடை, கல்ஜீக்காக அவ்வப்போது நன்றி சொல்லுவேன். பெற்றோரை மகிழ்ஜீக்கும்படியா கஷிம் அவர்கள் எனக்குச் செய்த எல்லாவற்றிற்காக நன்றி செலுத்தும்படியாகஷிம் அவர்களது நிறந்த நாளை பினைஜீல் வைத்து, அவர்களை வாழ்த்ணிக் கொண்டா டுவேன். பெற்றோரைக் குறித்து தீதாய்ப் நிறளீடம் பேசமாட்டேன். ஒருவர் பக்கம் சாயாமல் ஹிருவரைஜிம் சளீசமமாய் நேஞ்ப்பேன்.

**2.** எனது பெற்றோருக்குக் **கீழ்ப்படியத்** தீர்மா வீக்கிறேன். ஹிதைச் செய், அதைச் செய்யாதே என்று சொல்லும்போது எனக்கு எளீச்சல் வந்தாலும், ஹிந்தக் கட்டுப்பாடு என் எணிர்காலத்ணிற்கு அத்ணியாவஞியமானது என்று எனக்குச் சொல்ஸீக்கொள்வேன். அவர்கள் பினைவூட்டும்வரைக் கீழ்ப்படிதலை ஒத்ணிப்போடமாட் டேன். அவர்கள் என்வீடம் எணிர்பார்ப்பதை குறிப்நினால் அறிந்து அவர்கள் சொல்லும் முன்பே அதைச் செய்வேன். ''ஹிவள் எங்களுடைய நேச மகள், ஹிவஹீல் நிளீய மாழீருக்கிறோம்'' என்று பெற்றோர் மனப்பூர்வமாய்ச் சொல்லும் நாளுக்காய் ஏங்கி முயற்ஞிப்பேன்.

**3.** எனது பெற்றோருக்கு **உதஜீசெய்யத்** தீர்மாவீக் கிறேன். ஆறு மதிக்குப் நிந்தாமல் எழுந்து னிட்டி லுள்ளோருக்குக் காநி போட்டு பாத்ணிரங்களைக் கழுஜீ வைப்பேன். தம்ளரை சாப்பாட்டு மேசைழீலோ கண்ட ஹிடத்ணிலோ போடாமல் கழுஜீ உளீய ஹிடத்ணில் வைப்பேன். உணஷிப் பதார்த்தங்களை னிணாக்க மாட்டேன். சாப் நிட்டநின் எனது தட்டைஜிம் தம்ளரைஜிம் கழுஜீ வைத்து மேசையை சுத்தம் செய்வேன். எனது அறையைச் சுத்தமாகஷிம் ஒழுங்காகஷிம் வைப்பேன். பற்பசையை மூடாமலோ குஹீயலறைழீல் அழுக்குத் துதிகளைத் தொங்கஜீட்டோ செல்லமாட்டேன். குப்பையைக் குப்பைத் தொட்டிழீல் மட்டுமே போடுவேன்.

**4.** எனது பெற்றோர் தவறு செய்ஜிம்போது அவர்களை **மன்வீக்கத்** தீர்மாவீக்கிறேன். அவர்கள் பூரணராழீ ருக்க ஹியலாது என்பதைப் புளீந்துகொள்ளுகிறேன். நானும் தாயாகும் போது தவறிழைக்கத்தானே செய் வேன்! எனவே அவர்கள் பாத்ணிரரோ ஹில்லையோ, முழுமனதுடன் அவர்களை மன்வீப்பேன். அவர்களுக் காக ஹில்லாஜீட்டாலும், எனது ஹிதயம் லகுவாகஷிம் கசப்நின்றி ஹிருக்கஷிம் அவர்களை மன்வீப்பேன். அவர்களது தவறுகளை ஹிவீ ஒருபோதும் சொல்ஸீக் காட்ட மாட்டேன்.

**5.** எனது பெற்றோர்மீது ஆத்ணிரம் வரும்போதெல் லாம் என்னைக் **கட்டுப்படுத்ணிக்கொள்ளத்** தீர்மாவீக் கிறேன். முதஸீல் ஜெநித்துப் நின்பு அமளீக்கையாகி அதன்நின்பு அதைக் குறித்துப் பேசப் பெற்றோளீடம் நேரம் கேட்பேன். அவர்கஹீடம் பேசவேண்டியதைத் ணிட்டலீட்டு எனது கோபத்தை அடக்கிப் பேசுவேன். அவர்களது கருத்தைஜிம் கவவீத்துக்கேட்டு அது பியாயமான தாழீருந்தால் ஒத்துக்கொள்வேன்.

**6.** எனது சகோதர சகோதளீகளுடன் **நட்புடவீ ருக்கத்** தீர்மாவீக்கிறேன். சண்டை வந்தால் நானே முதலாவது ஜீட்டுக்கொடுப்பேன். அவர்களுடைய அனுமணிழீன்றி அவர்களது பொருட்களைப் பயன் படுத்தமாட்டேன். உதஜீ செய்ய முடிஜிம்போதெல்லாம் அவர்களுக்கு உதஜீசெய்வேன். அவர்களை எனக்கு ஏட்டாபோட்டியாய்க் கருதாமல் அவர்களைப் பாராட்டி ஊக்கமூட்டுவேன். ணிருமணத்ணிற்குப் நிறகும் அவர் களுக்குக் கடிதமெழுணி, சந்ணித்து, நல்லுறவைக் காப் பேன். நிற உறஜீனரோடும் கூடுமானவரை தொடர்பு வைத்துக் கொள்வேன்.

**7.** எனது பெற்றோர் எனக்கு பினைப்பூட்டவே தேவைழீல்லாத அளஷி **ணியான நேரத்தை** ஒழுங்காய்க் கடைநிடிக்கத் தீர்மாவீக்கிறேன். முடியாத பட்சத்ணில் மட்டுமேயன்றி ஞாழீறு ஆராதனைகஹீல் தவறாது பங்குகொள்வேன். ஹிருபத்ணிரெண்டு வயணிற்கு முன்பாக காதஸீத்து எனது படிப்பைஜிம் ஆன்மீக வாழ்வைஜிம் பாழாக்கமாட்டேன். ஹிருபத்ணிரெண்டிற்குப் நிறகு பெற் றோரது உதஜீஜிடனும் தேவனுடைய நடத்துதஸீன் படிஜிம் ஜெபத்துடன் வாழ்க்கைத் துணையைத் தெளீந் தெடுப்பேன். கட்டுப்பாடின்றி கூஎ பார்க்காணிருக்கத் தீர்மாவீக்கிறேன். கூஎ எனது ஆன்மீக வளர்ச்ஞியைஜிம், கல்ஜீப் பெருக்கத்தைஜிம், உடல் நலத்தைஜிம் பாணிக்க ஜீடமாட்டேன்.

**8.** மணமான மகளாக எனது பெற்றோருக்குக் கவீஷிடன் அவ்வப்பொழுது

**கடிதமெழுதத்** தீர்மாவீக் கிறேன். கணவன், மாலீயார், மாமனாரைக் குறித்து (ஆபத்தான பிலைமையாழீருந்தாலொஷீய) நிராது எழுதாணிருக்கத் தீர்மாவீக்கிறேன். பெற்றோர் எனது குடும்ப வாழ்ஜீல் தேவைழீன்றி தலைழீட அனுமணிக்க மாட்டேன். அவர்களை அவ்வப்போது சந்ணித்து என் நிள்ளைகள் அவர்களை நேஞிக்கஷிம் கனப்படுத்தஷிம் ஊக்குஜீப்பேன். ஞிறுஞிறு காரணங்களுக்காய்க் கண வனைப் நிளீந்து பெற்றோளீடம் தஞ்சம் புகமாட்டேன். வயதான பெற்றோருக்குப் பாரமாழீருக்க மாட்டேன். என்னால் முடிந்தவரை அவர்களது முணிர்வயணில் அவர்களுக்கு உதஷிவேன்.

9. எனது **பாட்டி தாத்தாஜீடம்** பதிஷிடன் நடந்து கொள்ளத் தீர்மாவீக்கிறேன். அவர்கஹீடம் பாசமுடனும் பண்புடனும் நடந்து கொண்டு, கூடுமானபோதெல்லாம் உதஜீ செய்வேன். அவர்கள் எனக்கு எளீச்சல்மூட்டும் போது எளீந்து ஜீழாமல் அதைச் சாதாரணமாய் எடுத்துக் கொள்ள முயலுவேன். அவர்கள் என்னைக் குறித்துப் பெருலீதம் கொண்டு என்னை அவர்களது மகுடமாய்க் கருதும்படி என் நடக்கையைக் காத்துக்கொள்வேன். அவர்களது நிறந்த நாட்கஹீல் அவர்களை வாழ்த்தத் தவறமாட்டேன். தூர ஹிருந்தால் ஆண்டுக்கு ஹிரு முறையாவது தேனொழுகக் கடிதமெழுதுவதோடல்லா மல் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களும் பிச்சயமாய் அனுப்நி வைப்பேன்.

**10.** லீன்சாரம், தண்ணீர், எளீபொருள், பாஸீதீன் பைகள், காகிதம் போன்றவற்றைச் ஞிக்கனமாய்ச் செலவஷீப்பதனால் **பூகோள ஹியற்கையைப்** பராமளீக்க உலகச் சமுதாயத்தோடு ஒத்துழைக்கத் தீர்மாவீக் கிறேன். வாகனத்தைப் பயன்படுத்தாமல் எங்கெல்லாம் நடந்து செல்ல முடிஜிமோ அங்கெல்லாம் நடந்து செல்வேன். எனது எணிர்காலத்ணிற்கும், உடல்நலத்ணிற்கும், காற்று மண்டலத்ணிற்கும் சாதகமாகப் பொதுப் பேருந்துகஹீல் பயணம் செய்து, பெற்றோரை வாகனம் வாங்கித் தரச்சொல்ஸீ நச்சளீக்காணிருப்பேன். எங்கள் தோட்டத் ணிலோ அக்கம் பக்கத்ணிலோ குறைந்தது ஒரு மரமாவது நட்டு வளர்ப்பேன்.

*(யாத் 20:12; மாற் 7:9–13; நீணி 17:6; மத் 5:21–24)*

# முதியவரின் தீர்மானங்கள்

*Dr. லில்லியன் ஸ்டான்லி*

**1.** எண்பது வயது மோசேயைப்போல உலகத்ணிலேயே லீகுந்த சாந்தகுணமுள்ளவனாகத் **தீர்மாவீக்கிறேன்** (எண் 12:3). மகன்கள், மகள்கள், மருமக்கள் எத்தனை எளீச்சல் மூட்டினாலும் அமைணியாழீருப்பேன். அயலகத் தார், அண்டைனிட்டுப் நிள்ளைகள், எனது வேலைக்காரர் அல்லது என்னைக் கவவீத்துவருபவருடன் பொறுமை ஹிழக்காணிருப்பேன். நிறரைச் சார்ந்ணிருக்கும் ஹிச்சகாப் தத்தை தேவனே அஹீத்த தாழ்மைப் படிப்நினையாக ஏற்றுக்கொண்டு நிறளீடம் உதஜீநாடத் தயங்காணிருப்பேன்.

**2.** ரூத்ணின் ஜீதவையான மாலீயார் நகோலீயைப்போல தவீமைஜிம் துக்கமும் என்னைச் சோர்நில் ஆழ்த்த ஹிடங்கொடாணிருக்கத் **தீர்மாவீக்கிறேன்.** என் மரு மக்களை எனது சொந்தப் நிள்ளைகளைப்போல நடத்ணி அவர்களது அன்பைக் கவர்ந்து கொள்வேன். அவர்களது நன்மையை நாடுவேன் (ரூத் 3:1). என் நிள்ளைகஹீன் வாழ்க்கைமுறைக்குப் பழகிக்கொண்டு அவர்களோடு சமாதானமாக வாழுவேன். என் மகனுக்கு அவனுக் கென்று ஹிப்பொழுது ஒரு குடும்பம் உண்டென்பதைப் புளீந்துகொண்டு எனது மனோற்சாகத்ணிற்கு மகனையே எணிர்பார்த்ணிருக்க மாட்டேன். மணமான என் மகன் எனக்குக் கீழ்ப்படியவேண்டுமென்று எணிப்பார்க்கவோ, அவனைஜிம் அவன் மனைஜீயைஜிம் நிளீக்கவோ, அவனை என் கைக்குள்ளாக வைத்துக்கொள்ளவோ மாட்டேன்.

**3.** லோஜீசாளைப்போல என் பேரப்நிள்ளைகளை நேஞிக்கத் **தீர்மாவீக்கிறேன்** (2 தீமோ 1:5). அவர்களைத் தொந்தரவாக எண்ணாமல் கிரீடமாக பினைப்பேன் (நீணி 17:6). அவர்களைக் கெடுக்கவோ, அவர்கள் பெற்றோ ரைக் குறித்து அவர்கஹீடம் ஏளனமாகப் பேசவோ, அவர்களைத் துன்புறுத்தவோ செய்யாமல் வேதக் கதைகளைச் சொல்ஸீக் கிறிஸ்துஜீடம் அவர்களை வஷீநடத்துவேன். என்னால் முடிந்த அளஷி அவர்களைப் பராமளீத்து என் நிள்ளைகளுக்கு

உதஜீயாழீருப்பேன் (ரூத் 4:16).

**4.** கடஷிளோடுகூட என் உறவை எதுஷிம் பாணிக்காதபடி பார்த்துக்கொள்ளத் **தீர்மாவீக்கிறேன்.** 365 வயதான ஏனோக்கைப்போல தேவனோடு சஞ்சளீப்பேன். வேத வாஞிப்பு, ஜெபத்தைக் குறித்து அசட்டையாழீருக்க மாட்டேன். 84 வயது அன்னாளைப்போல கூடியவரை உபவாசத்தோடும் ஜெபத்தோடும் ஆண்டவரைச் சேஜீத்து, அவரைக் குறித்து எல்லாளீடமும் பேசுவேன் (லூக் 2:37).

**5.** 85 வயது காலேபைப்போல உடலைக் கட்டாக வைத்துக்கொள்ளத் **தீர்மாவீக்கிறேன்** (யோசு 14:10,11). சோம்பலாழீருக்க மாட்டேன். முடிந்தவரை நடப்பேன். கூடுமான அளஷி நிறருக்கு உதஜீ செய்வேன். உடல்நலம் அனுமணிக்கும் அளஷி னிட்டு வேலைகஹீல் பங்கெடுத்து, என்னைஜிம் கவவீத்துக்கொள்ள முழுமுயற்ஞி எடுப் பேன். உடஸீன் எல்லா தசைகளைஜிம் மூட்டுகளைஜிம் அசைத்து உடற்பழீற்ஞி செய்வேன். மருத்துவர் ஆலோச னைப்படி உணவருந்ணி மருந்துண்டு எடையைஜிம் உடல் நலத்தைஜிம் காத்துக்கொள்ளக் கவனமாழீருப்பேன்.

**6.** யாரைஜிம் எதைஜிம் குறித்து முறுமுறுத்துக் குறை கூறாணிருக்கத் **தீர்மாவீக்கிறேன்.** நான் கடஷிளை நேஞிக்கிறபடியால் என் வாழ்ஜீன் எல்லாமே நன்மைக்காக நடக்கிறதென்று அறிவேன். நல்லதும் கெட்டதுமான எல்லா அனுபவங்கஹீன் மூலமாகஷிம் தேவன் என்னை அவரது குமாரவீன் சாயலாக மாற்றிக்கொண்டிருக்கிறார் என்று நம்புகிறேன் (ரோ 8:28,29). எனவே எல்லாவற் றைஜிம் அமைணியாகச் சகித்துக்கொள்ளுவேன். எனது பிலமைக்காக மற்றவர்களைப் பஷீசாட்ட மாட்டேன். எல்லாவற்றிற்கும் தேவனுக்குத் துணி செலுத்தத் தீர்மாவீக்கிறேன்.

**7.** ஹிவ்ஷிலகை ஜீட்டு வெஹீயேற என்னை ஆயத்தப் படுத்ணிக்கொள்ளத் **தீர்மாவீக்கிறேன்.** மரணம் என்னை ஆயத்தலீன்றிச் சந்ணிக்காது. எல்லாக் கடன்களைஜிம் செலுத்ணித் தீருவேன். யாருக்கும் ஜீரோதமாய்க் கசப்பை வைத்துக்கொள்ள மாட்டேன். நீணிபணிகளுக்கெல்லாம் நீணிபணியானவரைச் சீக்கிரமாய்ச் சந்ணிக்க வேண்டு மென்பதை பினைஜீற்கொண்டு, நேரடியாகவோ கடிதம் மூலமோ என் பரம ஜீரோணியாய் ஹிருந்தாலும் ஒப்புர வாவேன். சுத்த மனச்சாட்ஞிக்காய் முயற்ஞியெடுப்பேன்.

**8.** எசேக்கியாவைப்போல என் னிட்டுக்காளீயங்களை ஒழுங்குபடுத்தத் **தீர்மாவீக்கிறேன்** (2 ஹிரா 20:1). தேவப் பதிக்கென கதிசமானதொரு பகுணியை ஒதுக்கி உழீல் எழுதுவேன். என் சொத்துக்களைப் பங்கிடும்போது பாரபட்சலீன்றி, மகனா மகளா என்று பாராமல், சளீ சமமாய்ப் பங்கிடுவேன். "*ஹிவ்ஷிலகம் எனக்குச் சொந்த மல்லவே*" எனப் பாடிக்கொண்டு யாக்கோபைப்போல் பரதேஞியாய் வாழுவேன் (ஆணி 47:9).

**9.** ஞாபகசக்ணி குறைஷிபடுவதால் அநாவஞியமாய்ச் சந்தேகப்பட்டு யாரைஜிம் குற்றஞ்சாட்டாணிருக்கத் **தீர்மாவீக்கிறேன்.** கஹீப்போடு பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பேன். நல்ல தமாஷ் புத்தகங்களை வாஞித்து கலகலவென்று ஞிளீப்பேன். வேடிக்கைகள், ஜீளை யாட்டுகள், குடும்பக் கொண்டாட்டங்கள், பண்டிகை கஹீல் கலந்துகொள்ளத் தயங்கமாட்டேன். முடிஜிம் போதெல்லாம் வெஹீயே சென்று உற்சாகமடைவேன். என் வயதுக்கொத்தவர்களுடன் நட்பு கொண்டு அவர் களுடன் சந்தோஷமாக நேரம் செலவஷீப்பேன். நல்ல ஆரோக்கியமான உணஷி உண்டு, சுவாரஸ்யமான தொலைக்காட்ஞி பிகழ்ச்ஞிகள் பார்த்து, நல்ல புத்தகங்கள் வாஞித்து, செய்ணித்தாள் படித்து, பாடல்கள் கேட்டு மகிழ்ச்ஞிஜிடன் பொழுதுபோக்குவேன்.

**10.**தானிது தன் காலத்ணில் கடஷிளுடைய ஞித்தத்ணின்படி அவருக்கு ஊஷீயஞ்செய்ததுபோல என்னாஸீயன்றதைச் செய்ணிருக்கிறேனாவென்று என்னையே ஆராய்ந்து பார்க்கத் **தீர்மாவீக்கிறேன்** (அப் 13:36). "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், ஜீசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" என்பதே என் ஹிறுணிப் பாடலாழீருக்கும் (2 தீமோ 4:7). தேவனது ஹிரட்ஞிப்பை அனுபஜீத்ணிருக்கிறபடியால் ஞிலீயோனைப் போல சமாதானத்தோடே ஜீடை பெறுவேன் (லூக் 2:29).ச

**ஆசிரியரது பிற நூல்கள்—**

- ❐ *உலகில் உத்தமி*
- ❐ *குடும்பமே குடும்பம்!*
- ❐ *குதூகலக் கிறிஸ்தவம்*
- ❐ *சாத்தானுக்கு டாடா*
- ❐ *தெபொராளே, விழித்தெழு!*
- ❐ *தேவனே, நான் உமதண்டையில்...*
- ❐ *பயனுள்ள பாத்திரம்*
- ❐ *பறக்கும் பாவையர்*
- ❐ *12 பொன் மாதங்கள்*
- ❐ *மண்ணிலே வெண்ணிலா*
- ❐ *முன்னேறும் கிறிஸ்தவன்*
- ❐ *வயது பதினாறிருக்கும்*
- ❐ *வாலிப உலகம்*

விலைப்பட்டியலுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam River Road, Chintadripet,
Chennai 600002, India
*Tel: 044-28450411*

# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு
1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத
ஒரு திருப்பணி***

❐

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

❐

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்.

❐

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவ மனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

❐

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம்,
குஜராத், கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், தமிழ்நாடு மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள
கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும்
சபைகள் நிறுவுதல்.

❐

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் ''*ஆசீர்வாதம்*'' எனும் பத்திரிகை மற்றும்
புத்தகங்கள், ஒலி-ஒளி நாடாக்கள் வெளியிடுதல்.

❐

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
**தொலைபேசி: 0416-2242943, 2248943**
**<bym@sancharnet.in>**
**www.BlessingYouthMission.org**